PUBLIC LIBRARY JAFFNA

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

01.10.2014 - மலர் 11, இதழ் 31










விலை
ரூபா 15/-








மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடையளிக்க




1. There are __5__ children in the park.
2. There are _____ balls.
3. There are _____ trees in the park.
4. There are _____ bicycles.
5. _____ boys are flying kites.




1) இங்குள்ள வசனங்களை உரிய படங்களுக்குக்கீழ் எழுதுக.

- தலைமுடியை உலர்த்து.
- குளித்து சுத்தமாயிரு.
- நித்திரை செய்.
- வாகனம் ஓட்டு.
- முகத்தைக் கழுவு.
- பாடசாலைக்குச் செல்.
- விழித்தெழு.
- தலைமுடியை வாரு.
- பல் துலக்கு.



2) நாம் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் .......... துலக்க வேண்டும்.

3) 'நான் அதிகாலையில் விழித்தெழுந்தேன்' என்பதை பன்மையில் தருக.

..........................................................

1) படத்திலுள்ள மரக்கிளைகளில் அமர்ந்திருப்பவை யாவை?

1. குரங்குகள் 2. பறவைகள் 3. வண்டுகள்

2) மெதுவாக ஊர்ந்து செல்லக்கூடிய உயிரினமொன்று இங்குள்ளது. அது எது?

1. யானை 2. தவளை 3. ஆமை





3) இங்குள்ள விலங்குகளில் தோற்றத்தில் பெரிய விலங்கினம் எது?

..........................................................

4) யானை - பிளிறும் என்பது போல தவளை

..........................................................




1) இங்கிருப்பவற்றில் நிலத்திற்குக்கீழ் வளரக்கூடியவை எவை?

..............................

2) 'தக்காளி' என்பதன் ஆங்கிலச் சொல் யாது?

1. Tomato 2. Pumpkin 3. Potato

3) படத்திலுள்ள மரக்கறி வகைகளில் வட்ட வட்டமாய் கொடியில் காய்க்கும் மரக்கறி வகை எது?

..................................................

-ஜீநு

noolaham.org | aavanaham.org

துஷ்பிரயோகங்களிலிருந்து தப்பும் வழிகள்

இலவச கையேடு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை – விஜய்

இணைந்து வழங்கும் 16 பக்க இலவச இணைப்பாக

ஹலோ நண்பா கையேடு

ஹலோ நண்பா 1929



அடுத்த வாரம் 'விஜய்' பத்திரிகையுடன்...

சிறுவர்கள் தமது பிரச்சினைகளை தெரிவிப்பதற்கான 24 மணிநேர இலவச தொலைபேசி வழிமுறை

தவறாது அடுத்த வாரம் 'விஜய்' பத்திரிகையின் இந்த இலவச கையேட்டைப் பெறவேண்டுமாயின்...

இன்றே உங்கள் பிரதியை பதிவுசெய்யுங்கள்.





# தனது சேவைக்காலத்தில் அரை நூற்றாண்டைப் பூர்த்தி செய்யும் அதிவேக ரயில்





**ம**ணிக்கு சுமார் 270-320 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் ஜப்பானின் 'ஷிங்கான்சென் அதிவேக ரயில்கள்' (Shinkansen bullet trains). தமது சேவையை ஆரம்பித்து இவ்வருடம் ஒக்டோபர் மாதத்துடன் 50 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

1959 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புல்லட் ரயிலை நிர்மாணிப்பதற்கான திட்டம் ஜப்பானில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, சுமார் 5 ஆண்டுகளுக்குள் அந்த திட்டம் நிறைவுசெய்யப்பட்டு, 1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி இந்த ஷிங்கான்சென் ரயில் சேவை தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்திருந்தது. அந்தவகையில், உலகின் முதலாவது புல்லட் ரயில் சேவை 'டொகாய்டோ ஷிங்கான் சென்' ஆகும். டோக்கியோ நகரத்திலிருந்து ஒஸாகா நகரம் வரையே அதன் முதலாவது பயணம் அமைந்திருந்தது.

1964 இல் இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்பட முன்னர், சுமார் 1.3 மில்லியன் மக்கள் டோக்கியோ நகரத்திலிருந்து ஒஸாகா நகரம் செல்ல விமானசேவைகளையே பயன்படுத்தி வந்தனர். எனினும், ஷிங்கான்சென் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, டோக்கியோவில் இருந்து ஒஸாகா செல்வதற்காக விமானசேவையைப் பயன்படுத்திய பயணிகளின் தொகை சுமார் 200,000 ஆல் குறைந்தது.

ஒரு நாளைக்கு 323 தடவைகள் இந்த ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதோடு, ஒரு நாளைக்கு சுமார் 3,91,000 பயணிகள் இதைப் பயன்படுத்துகின்றனர். ஷிங்கான்சென் ரயில்களின் ஒவ்வொரு பயணத்திற்கு முன்னரும் ரயில் ஜன்னல்கள், மலசல கூடங்கள், மேசைகள், இருக்கைகள் என்பன சுத்தம் செய்யப்படுகின்றன. இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை ஒரு நிமிடமேனும் தாமதித்து பயணித்ததில்லை. அப்படியே கணக்கெடுத்தாலும் ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக 6 நிமிடங்கள் மட்டுமே தாமதித்திருக்கும் என்று கூறப்படுகின்றது. **- என்ஜீ**




விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652




தமிழ் FM வானொலியில்

வார நாட்களில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை

'ஆறாம் அறிவு' நிகழ்ச்சி கேளுங்கள்...

விஜய் சந்தா பரிசைப் பெறுங்கள்...!



தகவல்கள், விஞ்ஞான விளக்கங்கள், கேள்விகள்,
கணிதப் புதிர்கள் – இன்னும் பல சுவையான
அம்சங்களோடு – ஆறாம் அறிவு!

தமிழ் FM ▶ வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மூங்கிலைப் போல...



ஒருவன் விரக்தியோடு காட்டு வழியே சென்றுகொண்டிருந்தான். அவன் மிகவும் சோர்ந்து போய் காணப்பட்டான். அவனுக்கு வாழவே பிடிக்கவில்லை. அந்தக் காட்டில் ஒரு பெரியவரைச் சந்தித்தான். தன் முடிவைத் தெரிவித்தான். தான் வாழ்ந்தேயாகவேண்டும் என்பதற்கான ஒரே ஒரு காரணத்தைச் சொன்னால்கூட தனது முடிவை மாற்றிக்கொள்ளத் தயாராக இருப்பதாக அவன் கூறினான்.

பெரியவர் புன்முறுவல் பூத்தார். தனது குடிலுக்கு அவனை அழைத்துச் சென்றார். காட்டுக்குள் அற்புதமான மூங்கில் தோப்புக்குள் அவரது குடிசை அமைந்திருந்தது. சுற்றிலும் பூஞ்செடிகள் அழகாகப் பூத்திருந்தன. குடிசைக்கு வெளியே இருந்த பாயில் அவனை உட்கார வைத்த பெரியவர், சுற்றியிருந்தவற்றைக் காட்டிக் கேட்டார், "இவை என்னவென்று தெரிகிறதா?"

"பூஞ்செடிகளும் மூங்கில்களும்!" என்றான் அவன்.

"இவற்றை நான்தான் விதை போட்டு வளர்த்தேன்" என்றார் பெரியவர்.

"ஓ...! அழகாக வளர்ந்துள்ளனவே!" ஆச்சரியப்பட்டான் அவன்.

"இந்த பூஞ்செடிகளையும், அதோ, அந்த மூங்கில் தோப்பையும் நான் ஒன்றாகத்தான் நட்டேன்!" என்றார் அந்த பெரியவர். அவர் சொல்வதை அவன் வியப்புடன் கேட்டான்.

"ஆமாம்... இவை இரண்டையும் ஒரே நேரத்தில் நிலத்தைக் கொத்தி, விதைகளை விசிறினேன். நன்றாக சூரிய ஒளி கிடைக்கும்படி செய்தேன். காலந்தவறாமல் உரமிட்டேன். களையெடுத்தேன். நீர்பாய்ச்சினேன்!" சொல்வதை நிறுத்தியவர் சிறிது நேரம் கழித்து புன்முறுவலுடன் தொடர்ந்தார்.

"இந்த பூஞ்செடிகள் வேகமாக முளைவிட்டு வளர்ந்துவிட்டன. பச்சைப் பசேலென புதராய் மண்டிவிட்டன. அழகிய வண்ணங்களில் பூப்பூத்து மணம் பரப்பின. ஆனால், மூங்கில் விதைகள் நட்டு ஒரு வாரமாகியும் முளைவிடவில்லை. ஆனால், நான் தளர்ந்துவிடவில்லை. இரண்டு, மூன்று வாரங்களாகியும் இதே நிலைதான். மூங்கில் விதைகளிலிருந்து ஓர் அசைவும் இல்லை. கடைசியில் எட்டாவது வாரம் அதாவது 60 நாட்களுக்குப் பின்பு பூமியைப் பிளந்துகொண்டு மஞ்சள் நிறத்தில் சின்னச் சின்ன தளிர்கள் பூமிக்குள்ளிருந்து வெளிவந்திருந்தன. அந்த நேரத்தில் இந்த பூஞ்செடிகளுடன் ஒப்பிடும்போது, அது மிகவும் சிறிய உருவம்தான். ஆனால், ஆறு மாதங்களில் 100 அடிக்கும் மேலாக வளர்ந்துவிட்டன. ஒரு நாளைக்கு ஒரு மீற்றர் உயரம் என்று வேக வேகமாக வளர்ந்து இதோ, தோப்பாய் நிற்கின்றன.

அந்த விதைகள் கிட்டத்தட்ட 60 நாட்கள் முளைப்பதற்கான சூழலுக்குப் போராடியிருக்கின்றன. நம் கண்ணுக்குத் தெரியாமல் பூமிக்குள் வேர்பாய்ச்சி அதன் எழுச்சிக்குக் காரணமாய் நின்றன. அதனால், இறைவன் யார்மீதும் சுமக்க முடியாத பாரத்தைச் சுமத்திவிடுவதில்லை என்பதை எப்போதும் மறக்கக்கூடாது. உனது முடிவிலிருந்து உன்னை மாற்றிக்கொள்ள ஒரு காரணத்தைக் காட்டச் சொன்னாய். அதற்கான ஆயிரமாயிரம் காரணங்கள் உனக்குள்ளாகவே இருப்பதை நீ பொறுமையுடன் சிந்தித்தால் தெரிந்துகொள்ளலாம். உனது இத்தனை துன்பங்களும், கவலைகளும் ஒரு மீட்சிக்கான போராட்டமாகவே காணவேண்டும். யாருடனும் உன்னை ஒப்பிடாதே. ஒவ்வொருவரும் தனித்தனி திறமையானவர்கள். மூங்கிலோடு இதோ, இந்த பூஞ்செடிகளை ஒப்பிட முடியுமா? அதுபோல்தான் அடுத்தவரோடு எம்மை ஒப்பிடுவதும்!

உனக்கும் காலம் இருக்கிறது. நீயும் உயரமாய் வளரத்தான் போகிறாய். உனது முயற்சிகளை முடிக்கிவிட்டு மூங்கிலைப் போல வீரியமாய் வளர்ந்து விண்ணைத் தொடு" என்றார் பெரியவர் அவனை வாழ்த்தியவாறு.

இதனால் அவன் மனத்தெளிவுடன் வீடு திரும்பினான்.

# ஆசைக்கு அளவில்லை

'இந்த உலகத்தையே ஆளுகின்ற அதிகாரம் என் ஒருவனுக்கு மட்டுமே கிடைக்கவேண்டும்' என்று பேராசை கொண்டார் ஒரு மன்னர். தன் குருவிடம் சென்று அதற்கு வழி கூறுமாறு கேட்டார்.

குரு, மன்னனுக்கு புத்தி புகட்ட விரும்பினார்.

அவர் அரசனிடம், "சொல்கிறேன்... அதற்கு முன்பு எனக்கொரு காரியம் ஆக வேண்டும்" என்றார்.

அரசன் ஆவலுடன், "சொல்லுங்கள் குருவே! சொல்லுங்கள்" என்றார்.

"ஒன்றுமில்லை... இந்த செப்புக்குடுவையை உன்னால் முடிந்ததைக்கொண்டு நிரப்பித் தருவாயா" என்றார்.

'அட! இதென்ன பெரிய விடயம்' என்று எண்ணியபடியே, மன்னர் பணியாளரை அழைத்தார். அவரிடம், பொற்காசுகள் நிறைந்த பட்டுத்துணி மூட்டை ஒன்றைக் கொடுத்து அந்தக் குடுவையை நிரப்பச் சொன்னார். அப்பணியாளரும் பொற்காசுகளை அந்தக் குடுவையில்



கொட்டினார். குடுவை நிறையவேயில்லை! அது மிகவும் சிறியதுதான். ஆனால், போடப்போட பாதிக்குமேல் காலியாகவே இருந்தது. மேலும் நிறையக் காசுகள் கொட்டப்பட்டன. ஆனால், குடுவையோ நிறையாமலேயே இருந்தது.

குருவும், "என்ன அரசே, இந்த சின்னக் குடுவையை நிறைக்க முடியவில்லையா?" என்று கேலியாகக் கேட்டார்.

மன்னருக்கு அவமானமாகிவிட்டது. இதனால், கஜானாவிலிருக்கும் பொற்காசுகள் மற்றும் விலையுயர்ந்த மணிகள் எல்லாவற்றையும் மன்னர் கொண்டுவரச் சொன்னார். அனைத்தையும் போட்டாகிவிட்டது! அப்போதும் அந்த மாயப்பாத்திரம் நிறையவே இல்லை. கஜானாவும் காலியாகிவிட்டது.

மன்னர் மனம் கலங்கினார். உடலும் உள்ளமும் ஓய்ந்து போனது.

"குருவே, இது என்ன மாயம்? என்ன பாத்திரம் இது? என் மொத்த கருவூலமும் காலியாகிவிட்டதே! பாத்திரம் மட்டும் நிறையவே இல்லையே?" என்று கலங்கிப்போய்க் கேட்டார் மன்னர்.

"மன்னா, இது 'மனித மனதின் ஆசை' என்ற பொருளினால் செய்யப்பட்ட குடுவை! இதை நிரப்பவே முடியாது! ஆசைக்கு ஏது அளவு?" என்றார்.

பேராசை பெரு நஷ்டமாகும் என்பதை மன்னர் புரிந்துகொண்டு குருவை வணங்கினார்.



## முல்லா கதைகள்

# பதிலுக்குப் பதில்



ஒருநாள் முல்லா ஒரு துணிக் கடைக்குச் சென்றார். அங்கு தலைப்பாகைகளும் விற்கப்பட்டன. தனக்கு ஒரு தலைப்பாகை வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் முல்லா அங்கு சென்றார். அழகான ஒரு தலைப்பாகையைத் தேர்ந்தெடுத்து விலை பேசினார்.

அந்தத் தலைப்பாகையைத் தலையில் அணிந்துகொண்டார். அந்தக் கடையில் அழகான சால்வைகளும் விற்கப்படுவதை முல்லா கண்டார். தலைப்பாகைக்குப் பதிலாக சால்வையை வாங்கிவிடலாம் என்று அவருக்குத் தோன்றியது. அதனால், அவர் கடைக்காரரைப் பார்த்து, "இந்தத் தலைப்பாகைக்குப் பதிலாக சால்வையை வாங்கிக்கொள்கிறேன். இரண்டின் விலையும் ஒன்றாகத்தானே இருக்கிறது" என்றார்.

"உங்கள் விருப்பம்போல எதை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார் கடைக்காரர்.

முல்லா தலைப்பாகையை கழற்றிக்கொடுத்துவிட்டு சால்வையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

"ஐயா, நீங்கள் வாங்கிய சால்வைக்குப் பணம் கொடுக்கவில்லையே" என்று கடைக்காரர் கேட்டார்.

"நான் ஏன் பணம் கொடுக்க வேண்டும். தலைப்பாகைக்குப் பதிலாகத்தானே சால்வையை வாங்கிக்கொண்டேன்" என்றார் முல்லா.

"அப்படியானால், தலைப்பாகைக்குப் பணம் கொடுங்கள்" என்றார் கடைக்காரர்.

"தலைப்பாகைக்கு ஏன் பணம் கொடுக்கவேண்டும்? அதைத்தான் உங்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டேனே?" என்று கூறியவாறு கடையை விட்டுக் கம்பீரமாக வெளியே நடந்தார் முல்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தியாகத் திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாள்

தியாக மனப்பான்மை, இறை நம்பிக்கை, சமாதானம், சமத்துவம் போன்ற உன்னத பண்புகளை பிரதிபலிக்கும் ஒரு திருநாளாகவே 'புனித ஹஜ்ஜுப் பெருநாள்' அமைகின்றது. துல் ஹிஜ்ஜா மாதத்தின் பத்தாவது நாளில் உலகவாழ் முஸ்லிம்கள் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

ஹஜ் கடமையை நிறைவேற்றக்கூடிய இயலுமையையும் பாக்கியத்தையும் பெற்ற அல்லாஹுத்தஆலாவின் அடியார்கள், புனித மக்கா நகரம் சென்று இறையில்லமாம் கஃபதுல்லாஹ்வைத் தரிசித்து, விதியாக்கப்பட்ட ஹஜ் கடமைகளை நிறைவேற்றியதை அடுத்தே இப்பெருநாள் கொண்டாடப்படுகின்றது. நபி இப்றாஹீம் (அலை) மற்றும் நபி இஸ்மாயில் (அலை) ஆகிய இரு நபிமார்களின் தியாகங்களை பிரதானமாக நினைவுகூருவதாகவே ஹஜ் கடமையும் ஹஜ்ஜுப் பெருநாளும் அமைந்துள்ளன.

## 'ஹஜ்' பின்னணியில் மறைந்திருக்கும் தியாக மனப்பான்மை

ஹஜ் கிரியைகள் அனைத்தும் நபி இப்றாஹீம் (அலை) அவர்களோடும் அவரது மனைவி ஹாஜரா, மகன் இஸ்மாயில் (அலை) ஆகியோருடன் தொடர்புபட்டதாகவே உள்ளன. அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்கு ஏற்ப நபி இப்றாஹீம் (அலை) அவர்கள், தமது அருமைக் குழந்தையையும் மனைவியையும் மனித சஞ்சாரமே அற்ற பாலைவனப்பகுதியில் தனிமையில் விட்டுச் செல்கின்றார். இது அல்லாஹுத்தஆலாவின் கட்டளைதான் என்பதை அறிந்த அன்னை ஹாஜரா அவர்கள், அதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் அங்கேயே தங்கிவிடுகின்றார். இதனை அடுத்து அவர்கள் பல்வேறு சோதனைகளுக்கு முகம்கொடுக்கிறார்கள். அவை அனைத்திற்காகவும் அல்லாஹுத்தஆலாவிடமே அவர்கள் மன்றாடினார்கள். இறுதியில், தமது அருமை மகனாரான நபி இஸ்மாயில் (அலை) அவர்களைப் பலியிடுமாறு அல்லாஹுத்தஆலாவிடமிருந்து கட்டளை வந்தது. நபி இப்றாஹீம் (அலை) மற்றும் இஸ்மாயில் (அலை) ஆகிய இருவரும் அல்லாஹுத்தஆலாவின் அந்த கட்டளைக்கும் முற்றிலும் வழிபட்டவர்களாக, அதனை நிறைவேற்ற முற்பட்டவேளை, அல்லாஹுத்தஆலா அவ்விடத்திற்கு ஓர் ஆட்டை அனுப்பி, இஸ்மாயில் (அலை) அவர்களுக்குப் பதிலாக, அந்த ஆட்டைப் பலியிடுமாறு கட்டளையிட்டான். ஆக, நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது வாழ்நாட்களில் அல்லாஹுத்தஆலாவுக்காக பல்வேறு தியாகங்களை செய்துள்ளார்கள். அவை அல்லாஹுத்தஆலாவுக்கு மிகவும் விருப்பமானவையாக ஆகிவிட்டதனால், அவற்றை அடிப்படையாக வைத்தே ஹஜ் கடமையை விதியாக்கி, அதன் நிறைவில் ஹஜ்ஜுப் பெருநாளையும் ஏற்படுத்தியுள்ளான்.

## 'ஹஜ்' பற்றி சுருக்கமாக...



- இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளான கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு,ஹஜ் என்பனவற்றில் ஸகாத் மற்றும் ஹஜ் என்பன பணவசதி படைத்தோர் மீது மட்டுமே விதியாக்கப்பட்டுள்ளன.
- அரபு மாதக்கணக்கில் 12 ஆவது மாதமான துல் ஹிஜ்ஜா மாத்திலேயே ஹஜ் கடமை நிறைவேற்றப்படுகின்றது.
- உடலாலும் உள்ளத்தாலும் மேற்கொள்ளப்படும் ஒரு தனித்துவமான பயணமே 'ஹஜ் யாத்திரை' ஆகும்.
- பல்வேறு தியாகங்களுடன் தொடர்புபட்டிருப்பதால், ஹஜ்ஜுப் பெருநாளை 'தியாகத் திருநாள்' என்றும் அழைக்கின்றனர்.
- ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் சுபஹுத் தொழுகையிலிருந்து அதற்கடுத்து வரும் அய்யாமுத்தஷ்ரீக் உடைய நாட்களில் (பிறை 11, 12, 13), இறுதி நாளான (பிறை 13) அஸர் நேரம் வரை பெருநாள் தக்பீர் சொல்வது சுன்னத்தாகும்.
- துல் ஹிஜ்ஜா மாதத்தின் முதல் பத்து நாட்களும் , அந்த நாட்களில் செய்யும் நன்மையான காரியங்களும் அல்லாஹுத்தஆலாவிடத்தில் மிகவும் மகத்துவமுடையவையாக இருக்கும்.
- இம்மாதத்தின் பிறை 9 இல் அரஃபா நோன்பை நோற்பது சுன்னத்தாகும்.


## 'ஹஜ்' கற்றுத் தரும் படிப்பினைகள்

உலகின் எல்லாத் திசைகளில் இருந்தும் பல லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடும் ஒரு மாநாடாகவே ஹஜ் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காகச் செல்வோர் இன, நிற, மொழி, தோற்றம், அந்தஸ்து போன்ற வேறுபாடுகளை மறந்து ஹஜ் கிரியைகளில் ஈடுபடுவர். ஆகவே, மக்களிடையே சமத்துவம், ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, நல்லுறவு, சமாதானம் போன்ற நற்பண்புகளை வளர்க்கக்கூடியதும் வலுப்படுத்தக்கூடியதுமான ஒரு சந்தர்ப்பமாகவே ஹஜ் அமைந்துள்ளது. ஹஜ்ஜின்போது நபி இப்றாஹீம் (அலை) அவர்களினதும் அன்னாரது குடும்பத்தாரினதும் தியாகம், அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்கு முற்றாக கட்டுப்படுதல் என்பன குறித்து அதிகமதிகம் நினைவுகூரப்படுவதால், இறையச்சம், தியாக மனப்பான்மை, இறை கட்டளைக்கு கீழ்படிதல் போன்ற நற்குணங்கள் நம்மில் உணர்த்தப்படுகின்றன. அத்துடன், ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்பவர்கள் தமது சுயநலன்கள், குடும்பம், தொழில் என அனைத்தையும் துறந்து அல்லாஹுத்தஆலாவின் கட்டளை என்ற ஒரே காரணத்திற்காக இப்பயணத்தில் ஈடுபடுவதானது, இறையச்சம், தியாகம் என்பனவற்றை நம்மில் வளர்த்துவிடுவதாக உள்ளது.

-அனைவருக்கும் எமது ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்

-ஈத் முபாரக்-

-ஜீநு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள சமுத்திரங்கள், ஆறுகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளிலும் பல்வேறு வகையான உயிரினங்கள் வாழ்கின்றன. இவற்றில் மனிதனையும் ஏனைய உயிரினங்களையும் மூர்க்கத்தனமாகத் தாக்கி தீங்கு விளைவிக்கக்கூடிய பயங்கரமான உயிரினங்களும் இருக்கின்றன. எனினும், தொகை அடிப்படையில் பார்க்கும்போது, இத்தகைய தீங்கிழைக்கும் உயிரினங்களின் தொகை மிகக் குறைவாகவே உள்ளன. எனினும், அத்தகைய உயிரினங்கள் குறித்த தகவல்களை அறிந்து வைத்திருப்பது அவசியமானதாகும்.

# தீங்கு விளைவிக் நீர்வாழ் உ

## உடலுக்குள் ஊடுருவும் கென்டிரு



மிகவும் சின்னஞ்சிறிய உருவில் காணப்படும் கென்டிரு மீன்கள் தென் அமெரிக்கக் கண்டத்தில் பாயும் பல்வேறு நதிகளில் வாழ்கின்றன. இந்த மீன்களுக்கு மனிதர்களின் உடலுக்குள் ஊடுருவிச் செல்லும் ஆற்றல் உள்ளது. அவ்வாறு மனித உடலுக்குள் சென்றால் சத்திரசிகிச்சை மூலம் அதனை நீக்கவேண்டும். அவ்வாறு நீக்காவிட்டால் அது உயிருக்கே ஆபத்தாகிவிடும்.

## கூர் உருளைச் சிப்பி மீன்கள்



தென் பசுபிக் சமுத்திரத்திலும் இந்து மகா சமுத்திரத்திலும் கூர் உருளைச் சிப்பிகள் வாழ்கின்றன. இந்த சிப்பிகளின் விஷம் கொண்ட முட்கள் எம்மைத் தீண்டினால் எமது உடலின் ஒரு பகுதி செயலிழக்கும். சிலவேளைகளில் மரணமும் நிகழலாம். geographer cone எனும் சிப்பி வகைகளும் உள்ளன. இவை சிப்பி வகைகளிலேயே அதிக விஷத்துடன் கூடிய திகிலூட்டும் சிப்பிகளாகும்.

## மின் விலாங்கு



தென் அமெரிக்காவில் நன்னீரில் இந்தவகை 'மின் விலாங்கு' (Electric Eel) வாழ்கின்றது. இந்த மின் விலாங்கு ஏனைய மின் விலாங்குகளை விடவும் அதிக சக்தி வாய்ந்தது. இது 650 வோல்ட் மின்சாரத்தை வெளியிடக்கூடியது. அந்தளவு மின்சாரம் மனிதர்களைத் தாக்கினால் உயிர் ஆபத்து ஏற்படும். அத்துடன், இந்த மின் விலாங்கின் வேட்டையாடும் முறை விசித்திரமானது. இதன் மின் அதிர்ச்சியில் இரை உறைந்து நிற்க அதனை இந்த மின் விலாங்கு இலகுவாக இரையாக்கிக்கொள்கின்றது.



## கொடிய பிரானா

தென் அமெரிக்க நதிகளில் வாழும் அதிபயங்கரமான ஒரு மீன் இனம்தான் பிரானா. அளவில் சிறியதாயினும் பெரும் கூட்டமாகவே திரியும். இவற்றின் வசிப்பிடங்களில் எவர் வந்தாலும், எத்தகைய பெரிய உயிரினமாயினும் பிரானாக்கள் கூட்டமாக வந்து தாக்கி அழித்துவிடக்கூடியவை. ஒரு மனிதன் பிரானா மீன் கூட்டத்தில் சிக்கினால் ஒரு நிமிடத்திற்குள் அந்த மனிதனின் எலும்புகளை மட்டுமே மிகுதியாக்கும்.

## ஜெலி மீ



கடல் கொடுங்குளவி அல்லது பெட்டி ஜெலி என அழைக்கப்படும் ஜெலி மீன்கள், அவுஸ்திரேலிய கரையோரக் கடலில் அதிகம் வாழ்கின்றன. இதன் தலையில் இருந்து மயிர்போல் நீண்டு செல்லும் பகுதி 9 மீற்றர் நீளமானவை. இதில் கொடிய பாம்பு விஷம் அடங்கியுள்ளது. அவுஸ்திரேலிய உயிர் காப்புப் படையினர்/பெட்டி ஜெலி தீண்டுவதில் இருந்து தம்மைக் பாதுகாத்துக்கொள்ள நைலோனினால் பலமாகப் பின்னப்பட்ட உயிர்காப்பு உடைகளை பயன்படுத்துகின்றனர். ஏதோ ஒரு வகையில் இந்த பெட்டி ஜெலியின் தீண்டுதலுக்கு இலக்கானால் மூன்று நிமிடம் எனும் குறுகிய நேரத்திலேயே தீண்டப்பட்டவர் உயிரிழப்பார்.

## பஃபர் மீன்கள்






பஃபர் மெகீ அல்லது மெகீ என அழைக்கப்படும் இம் மீன்கள் ஜப்பானில் வாழ்கின்றன. இந்த மீன்களின் உடலில் உள்ள நரம்புகளில் கொடிய விஷம் அடங்கியுள்ளது. இந்த மீன்களை உணவாக உண்டால் அதில் அடங்கியுள்ள விஷம் உடலில் உள்வாங்கப்பட்டு மரணம் சம்பவிக்கும் நிலை உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கக்கூடிய உயிரிகள்

## ீன்கள்





## சுறா

பெரும்பாலான சுறாக்கள் மூர்க்கம் கொண்டு மனிதரைத் தாக்குவதில்லை. எனினும், சில வகையான சுறாக்கள் மாத்திரம் மனிதனை தாக்கி பயங்கரமாக வதை கொடுக்கும் மூர்க்கச் செயலில் ஈடுபடுகின்றன. Great White மற்றும் bull சுறாக்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். 2008 ஆம் ஆண்டு மாத்திரம் இந்த வகை சுறாக்கள் 55 சந்தர்ப்பங்களில் மனிதனை தாக்கியுள்ளன. இவற்றில் 4 சந்தர்ப்பங்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

## நீல மோதிர ஒக்டோபஸ்

சிலவகையான ஒக்டோபஸ்கள் அதிபயங்கர உயிரினங்களாக இருக்கின்றன. அவுஸ்திரேலிய கடலில் வாழும் நீல மோதிர ஒக்டோபஸ் (Blue Ring Octopus) தீண்டினால் உடலின் ஒரு பகுதி செயலிழப்பதோடு மரணத்தையும் விளைவிக்கும்.



இம்மீனின் விஷமுடைய பகுதியை நீக்கிவிட்டு அம்மீன்களை உணவாகத் தயாரிப்பதில் ஜப்பானியர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இதற்காக அவர்கள் விசேட பயிற்சியும் பெற்றுள்ளனர். விஷமுள்ள அந்த மீனின் பகுதியை உட்கொண்டால் மரணத்திற்கான வாய்ப்புகள் 60% இருப்பதாக கூறப்படுகின்றது. பஃபர் மீன்களை சரியான முறையில் சமைக்காமல் உண்பதால் வருடந்தோறும் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஜப்பானியர்கள் உயிர் இழக்கின்றனர்.

## ஆழ்கடலில் மறைந்து வாழும் கல்மீன்



ஆழ்கடலில் மறைந்து வாழும் கல்மீன்கள் அங்கு காணப்படும் கடல் தாவரங்களையே உணவாக உட்கொள்கின்றன. ஆழ்கடலில் நீந்துவோருக்கு இந்த மீன்கள் மீது உராய்வு ஏற்பட்டால் இந்த மீன்களின் பிடரியில் உள்ள முள் குத்திவிடுகின்றது. அது உடனடியாகப் பெரும் வேதனையை ஏற்படுத்தும். அவ்வேளை உடலினுள் சென்ற விஷத்தின் காரணமாக உயிரிழப்பும் ஏற்படும்.

## கைவினைக்கலை

# ஒரே வெட்டில் எட்டு இதழ் பூ

**தேவையான பொருட்கள்:**


- மஞ்சள் கடதாசி (மூன்று நிறங்களில் கடும் மஞ்சள் முதல் இளம் மஞ்சள் வரை)
- கத்தரிக்கோல்
- பசை
- பென்சில்

**1 ஆவது படிமுறை:**

கடும் நிறம் கொண்ட மஞ்சள் கடதாசியை எடுத்து அதனை 10 செ.மீ. நீள அகலத்தில் வெட்டிக்கொள்ளுங்கள்.

**2 ஆவது படிமுறை:**

பின்னர் கடதாசியை நான்கு சம பகுதிகளாக மடித்து விரித்துக் கொள்ளுங்கள்.



**3 ஆவது படிமுறை:**



கத்திரிவெட்டாக மடித்து விரித்துக்கொள்ளுங்கள். (மடிப்பு கோடுகளைப் பின்பற்றுங்கள்)

**4 ஆவது படிமுறை:**




தாளை முக்கோணமாக மடித்துக் கொண்டு, ஒரு பகுதியை திறந்து உள்நோக்கி மடித்துக்கொள்ளுங்கள்.

**5 ஆவது படிமுறை:**

முக்கோணத்தின் ஏனைய பகுதியையும் அவ்வாறு மடித்துக்கொள்ளுங்கள். அதன்போது உங்களுக்கு இவ்வாறானதொரு தோற்றம் கிடைக்கும்.



**6 ஆவது படிமுறை:**




இப்பொழுது மடிப்புக் கோட்டினைப் பின்பற்றி படத்தில் உள்ளவாறு மடிப்பு ஒன்றைப் பெறுங்கள்.

**7 ஆவது படிமுறை:**

அதே போன்ற மடிப்பினை கடதாசியின் ஏனைய பகுதியிலும் செய்யுங்கள்.




**8 ஆவது படிமுறை:**



இப்பொழுது படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இரண்டாக மடியுங்கள்.

**9 ஆவது படிமுறை:**




கோட்டினைப் பின்பற்றி, வெட்டு ஒன்றினை இட்டு அதனை விரியுங்கள். இப்பொழுது எட்டு இதழ் பூ ஒன்று உங்களுக்குக் கிடைக்கும்.

**10 ஆவது படிமுறை:**



நீளமான தாள் ஒன்றை எடுத்து மெல்லிய வெட்டுகளை இட்டு அதனை மொட்டுக்கள் போன்று அமைக்கலாம்.

**11 ஆவது படிமுறை:**



ஏனைய மஞ்சள் தாள்களினாலும் சிறு பூக்களை வெட்டுங்கள். அதனை ஒன்றன்மீது ஒன்று வைத்து ஒட்டிக்கொள்ளுங்கள், நடுவில் மொட்டுக்களை ஒட்டுங்கள். இப்பொழுது அழகான பூங்கொத்து ஒன்று கிடைக்கும்.

**ஆலோசனை:**

இந்த பூக்களை மேலும் நீங்கள் அழகுபடுத்தலாம். பல நிறத் தாள்களில் அமைக்கலாம். பூ இதழ் அதிகரிக்கும் போது அழகும் அதிகரிக்கும். பாடசாலையில் ஆசிரியர் மேசையில் வைத்து அழகுபடுத்தலாம். அனைவரதும் பாராட்டுகளும் உங்களுக்குக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: .................................................

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

★ கீழ் உள்ள கடிதத்தை வாசித்து, வினாக்களுக்கு விடை தருக.

இல. 510, காலி வீதி,
இரத்மலானை.
2014.09.10

அன்புள்ள நண்பா,

வணக்கம். உன் கடிதம் இன்று கிடைக்கப்பெற்றேன். நீ பரீட்சைக்கு கொழும்புக்கு வருவது அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். நீ தாராளமாக எங்கள் வீட்டில் வந்து தங்கலாம். வருவதற்கு முன் வரும் திகதியையும் நேரத்தையும் அறிவித்துவிட்டு வா. நான் உன்னை அழைத்துச் செல்ல புகையிரத நிலையத்துக்கு வருவேன்.

இப்படிக்கு
அன்புள்ள நண்பன்
நா.காந்தன்

01. இக்கடிதம் எத்தனையாம் திகதி எழுதப்பட்டது?.......................................

02. இக்கடிதம் யாரால் எழுதப்பட்டது? .......................................................

03. கடிதம் எங்கிருந்து எழுதப்பட்டுள்ளது? ...................................................

04. காந்தனின் நண்பன் ஏன் கொழும்புக்கு வருகிறான்? ..............................

05. 'நலமறிய' என்ற சொல்லைப் பிரித்து எழுதுக. ........................................

06. கடிதத்தில் இருந்து அஃறிணை, ஒருமை, முன்னிலை, தன்மை பன்மை, வினைமுற்று ஒன்று தருக. ..................................................

07. நண்பனை அழைத்துச் செல்ல எங்கு வருவதாகக் கூறப்பட்டுள்ளது? ....................................................

★ பின்வரும் பத்து வினாக்களுக்கும் சரியான விடையை தெரிவுசெய்க.

08. இலை அசைய அசைய - காகம் கரைய கரைய சேவல் கூவுது - கொக்கரக்கோ கொக்கரக்கோ. இவ்வரிகள் எதைப்பற்றிக் கூறுகிறது?

1. காலைப்பொழுது பற்றி 2. மாலைப்பொழுது பற்றி
3. இலைகளைப் பற்றி

09. 'ஆடத்தெரியாதவன் நிலம் கோணல் என்றானாம்' இது வெளிப்படுத்துவது;

1. இயலாமையை வெளிப்படுத்திக்கொள்ள மறுத்துக் காரணம் கூறல்
2. பொருத்தமற்றதை தெரிவுசெய்தல்
3. நிலம் கோணலாக இருத்தல்

10. 'துள்ளுகின்ற மாடு பொதி சுமக்கும்' இதன் கருத்து;

1. மாடு போன்று துள்ளக் கூடாது
2. மிகவும் பெருமைப்படக் கூடாது 3. துள்ளுகிற மாடு நல்லது

11. 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல' இங்கு உவமை;

1. முடவன் 2. கொம்பு 3. கொம்புத் தேன்

12. பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற சொல் எது?

1. அதிகாறி 2. அறிவாளி 3. பட்டதாறி

13. பின்வருவனவற்றுள் பெண்பால் வினைச்சொல் யாது?

1. ஆசிரியை 2. ஆடினாள் 3. சென்றார்




14. ஆடு, மாடு மேய்ப்பவன்;

1. பாகன் 2. இடையன் 3. மீகாமன்

15. போர் புரிந்த மன்னன் இறுதியில் வாகை சூடினான். இங்கு 'வாகை' என்பது;

1. முடி 2. பயன் 3. வெற்றி

16. சிறிய குழந்தை தேம்பித் தேம்பி அழுதது. இங்கு எழுவாய் அடைமொழிச்சொல்;

1. சிறிய 2 தேம்பி 3. குழந்தை

17. வெளிநாட்டில் இருந்து வந்த குமார் ஆகாயத்தில் கோட்டை கட்டினான். இங்கு அடிக்கோடிடப்பட்ட பகுதி குறிப்பது;

1. அகங்காரம் கொள்ளல் 2. ஆகாயத்தில் வீடு கட்டுதல்
3. பேராசைப் படல்

★ பின்வரும் சொற்தொகுதியில் பொருந்தாத சொல் உள்ள சொற்தொகுதியை தெரிவுசெய்க.

18. 1. மலர், காய், இலை, கொப்பு
2. சட்டி, பானை, குடம், பீங்கான்
3. சுத்தியல், வாள், குறடு, உளி

19. 1. புடலங்காய், பாகற்காய், பயற்றங்காய், பீர்க்கங்காய்
2. அன்னாசி, பப்பாசி, வாழைப்பழம், தோடம்பழம்
3. பருப்பு, கடலை, பயறு, வற்றாளை

20. 1. நெல், வெங்காயம், புல்
2. மா, பலா, தென்னை
3. செவ்வரத்தை, தோடை, ரோஜா

21. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்க.

| அபிவிருத்தித் நாம் பார்ப்பதற்கு மகாவலி சென்றோம் திட்டத்தை | ........................................ |
|---|---|

★ பின்வரும் சொற்களுக்கு தனிச்சொல் தருக.

22. வயலை உழுது நெல் விளைவிப்பவன்: ..................................

23. சட்டி-பானை செய்வோன்: ..................................................

24. பொருட்களை விற்பனை செய்பவன்: ....................................

★ தரப்பட்ட சொற்கூட்டங்களில் ஒரு சொல் மட்டும் வேறுபட்டது. அதன்கீழ் கீறிடுக.

25. வனம், காடு, தரணி, கானகம்

26. சினம், கோபம், சாந்தம், சீற்றம்

விடைகள் அடுத்த வாரம் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தினசரி பத்திரிகைகளில் 'சஞ்சிகை' அம்சங்கள்

தினசரி பத்திரிகைகளில் செய்திகளுக்கு அப்பால் சில சஞ்சிகை அம்சங்கள், இலவச இணைப்புக்கள் ஆகியன இருப்பதை அவதானித்திருப்பீர்கள். சில காலங்களுக்கு முன்னர்வரை தினசரி பத்திரிகை என்றால் செய்திகளுக்கு மாத்திரமே முன்னுரிமை கொடுத்து வரப்பட்டது. ஞாயிறு இதழில் மாத்திரமே இவ்வாறு சஞ்சிகை அம்சங்கள் இடம்பெற்று வந்தன. ஆனால், காலப்போக்கில் பத்திரிகைகளின் வியாபாரப் போட்டி நிலைக்குள் வாசகர்களின் அபிமானத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கு புதுப்புது உத்திகளை கையாளவேண்டிய தேவை செய்திப் பத்திரிகைகளுக்கு ஏற்பட்டன. அதன் ஒரு வெளிப்பாடு தான் இந்த சஞ்சிகை மற்றும் இலவச இணைப்புக்களுமாகும். வானொலி, தொலைக்காட்சிகளும் இன்று பாவனையில் உள்ள நிலையில் வெறும் செய்திகளுக்காக மாத்திரமே பத்திரிகைகளை தேடி வாசிக்கும் நிலையில் மக்கள் இருப்பார்களா? என்றவோர் கேள்வியும் எழவே செய்கின்றது.

எனவேதான் செய்திகள் தவிர்ந்த இதர சுவாரஸ்யமான பெண்கள், ஆடவர், அதிசயங்கள், சிறப்பு அம்சங்கள் என பலதரப்பட்ட பல்சுவை அம்சங்களை உள்ளடக்கியவாறு தினசரி பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இதன்படி, எப்படியேனும் வாசகர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சியை இந்த பத்திரிகைகள் செய்கின்றன.



ஆசிரிய பீடத்தைப் பொறுத்தவரையில் இந்த மேலதிக சிறப்பு அம்சங்களை அமைப்பதற்கென தனியாக சிலர் நியமிக்கப்பட்டிருப்பர். இவர்கள் அடுத்தடுத்த நாட்களுக்கான சஞ்சிகைப் பகுதிகளை முன்கூட்டியே தயார்படுத்தி விடுவதனால், இந்த சஞ்சிகைப் பகுதிகள் முன்கூட்டியே பிரசுரிக்கப்பட்டு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும். குறித்த திகதிக்கான பத்திரிகையின் செய்திகள் அடங்கிய பகுதியே Main Set எனப்படும் பிரதான செய்திப் பகுதியாக அமையும். இந்தப் பகுதியே ஏற்கனவே இதற்கு முன்னர் நாம் ஆராய்ந்தவாறு நகரப்பதிப்பு, மாகாணப் பதிப்பு என்ற பகுதிக்குள் வருபவையாகும். இரவோடு இரவாக இந்த பிரதான பகுதி அச்சாகிய பின்னர் அதனுடன் ஏற்கனவே அச்சாகித் தயார் நிலையில் உள்ள சஞ்சிகைப் பகுதியும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு முழுப்பத்திரிகையாக பொதிசெய்யப்படும்.

வாசகர்களைப் பொறுத்தவரையில் செய்திகளை வாசித்தாலும், தமக்கு பொழுதுபோக்காக வேறு புதினங்களை அறியவேண்டும் என்ற ஆவல் இருப்பதுண்டு; அந்த ஆவலைத்தான் மேற்படி சஞ்சிகைப் பகுதிகள் பூர்த்தி செய்கின்றன. இத்தகைய பகுதிகளை அமைப்பதற்கு பொறுப்பாக இருப்பவர்கள். Feature Editors என்று அழைக்கப்படுவர். ஆசிரியர் பீடத்தில் பல எண்ணிக்கையிலான Feature Editors மார் இருப்பர்.



இவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அம்சங்கள் பிரித்து வழங்கப்பட்டிருக்கும்.

இதே பத்திரிகை நிறுவனங்கள் இந்த இதர அம்சங்களைக் காட்டி அவற்றுடன் தொடர்புடைய உற்பத்தி நிறுவனங்கள், சேவை நிறுவனங்களின் விளம்பரங்களையும் பெற்றுக்கொள்கின்றன. இன்னுமொரு வடிவில் இது மேலதிக விளம்பர வருவாயை அதிகரித்துக்கொள்ளும் ஒரு வழியாகவும் வியாபித்துவிட்டது.

ஒரு பத்திரிகையை கொண்டு நடத்துவதற்கு தேவையான நிதியானது, அதிகப்படியான விளம்பர வருவாயிலேயே தங்கியிருப்பதனால் காலமாற்றத்திற்கேற்ப இவ்வாறான மாற்றங்கள் செய்யப்படுவதும் தவிர்க்க முடியாததாகவே உள்ளது.




(தொடரும்)

-ரிஷபன்

## வெல்லுங்கள்! விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!




பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*17.09.2014* TOP News கேள்விக்கான விடை:
Glove One

Pen Drive வெற்றியாளர்:
வி.அர்ச்சன்,
21/3, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(01.09.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

**இவ்வார கூப்பன்:**
01.09.2014

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தொ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..............................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இலங்கையில் அஞ்சல் சேவை

ஆங்கிலேயர் கரையோரப் பகுதியில் சகல நகரங்களையும் தொடர்புபடுத்தி பாதைகளை அமைத்தனர். இந்த பாதைகளானது, கொழும்பிலிருந்து நீர்கொழும்பிற்கும், சிலாபம், புத்தளம், அரிப்பு, பளை ஆகிய இடங்கள் வழியாக யாழ்ப்பாணத்திற்கும் சென்றது. அதே பாதை தென்திசையில் ஆனையிறவு, திருகோணமலை, மட்டக்களப்பு, கோமாரி, கல்முனை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி வரை சென்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கும் திருகோணமலையில் இருந்து கொக்குளாய்க்கும் அரிப்பில் இருந்து அநுராதபுரத்திற்கும் கொழும்பிலிருந்து குருணாகல் வழியாக திருகோணமலைக்கும் பாதைகள் அமைக்கப்பட்டன.

இந்தப் பாதைகளால் அஞ்சல் கடிதங்களை விநியோகிப்பது இலகுவாக அமைந்தது. பிரித்தானிய யுகம் ஆரம்பத்தில் இருந்து அஞ்சல் நடவடிக்கைகளை ஆரம்பித்தே இருந்தது. அவ்வாறே ஒரு குறிப்பிட்ட குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு காணி வழங்கி, அவர்களை வரிச்சுமையிலிருந்து விடுவித்தனர். அதற்குப் பதிலாக அவர்களைப் பயன்படுத்தி சம்பளம் வழங்காமல் தபால் விநியோக முறையை ஒல்லாந்தரும் நடைமுறைப்படுத்தினர். அது செலவு அடிப்படையில் பார்க்கும் பொழுது அவர்களுக்கு பெரிதும் லாபத்தைத் தரும் நடைமுறையாக இருந்தது. கி.பி 1802 ஆம் ஆண்டுவரை ஆங்கிலேயரும் இதனையே நடைமுறைப் படுத்தினர். அதன் பின் அந்தோனி பர்த்தோலெச்சி அவர்கள் தபால் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் தபால் சம்பந்தமான புதிய முறையொன்றை ஏற்படுத்தினார். சம்பளம் வழங்கி ஆட்களை நியமித்து நாள் தோறும் விரைவான கடித விநியோக முறையை நடைமுறைப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கவனத்தை ஈர்த்த ராட்சத முதலை





அவுஸ்திரேலியாவின் அடிலேய்ட் நதியில் வாழும் 'ப்ரூட்டஸ்' எனும் பெயருடைய முதலை, அந்நதியில் கப்பலில் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்து, உலகப் புகழ் பெற்றுள்ளது. காரணம், அதன் வேட்டையாடும் திறமையாகும். அண்மையில் பிரித்தானியாவின் 'டெய்லிமெயில்' செய்திச்சேவையினூடாகவே ப்ரூட்டஸின் வேட்டையாடும் திறமை பற்றிய இந்த அற்புதமான படங்கள் வெளியிடப் பட்டிருந்தன.

அடிலேய்ட் நதிச் சவாரியில் இணைந்திருந்த என்றூ பேயிஸ் என்பவருக்கே, சுறா மீன் ஒன்றை ப்ரூட்டஸ் இரையாக்கிக்கொள்ளும் இந்த அற்புதக் காட்சியைப் புகைப்படமெடுக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சுறாவுடன் சண்டையிட்டு, இறுதியில் அதனை தனது வாயில் கவ்விக்கொண்டு நதிக்கரையில் உள்ள கண்டல் புதர்களுக்கிடையே சென்ற காட்சியையும் இதன்போது என்றூ புகைப்படம் பிடித்தார். இதனை அடுத்தே, ப்ரூட்டஸ் பற்றி மீண்டும் பேசப்படலாயிற்று. ப்ரூட்டஸ்ஸின் இந்த வேட்டைக்குப் பின், அது சர்வதேச மட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.



5.5 மீற்றர் நீளமும் 2 தொன் நிறையும் கொண்ட ப்ரூட்டஸ், சுமார் 80 வயதுடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. அடிலேய்ட் நதியின் வட பகுதியில் வாழும் இந்த ராட்சத முதலை, உலகின் கவனத்தை ஈர்த்த முதல்தடவை இதுவன்று. 2011 ஆம் ஆண்டும் உலகெங்கும் இதன் புகழ் பரவியது. அடிலேய்ட் நதிக்கரையில் நீர் அருந்துவதற்காக வரும் கங்காருக்களை, ப்ரூட்டஸ் பாய்ந்து பிடித்து இரையாக்கிக் கொண்ட தகவல், அவுஸ்திரேலிய பத்திரிகைகளில் வெளியானமையை அடுத்தே ப்ரூட்டஸின் புகழ் உலகெங்கும் இவ்வாறு பரவியது. எவ்வாறாயினும், தனக்கு மேலாகப் பறக்கும் பறவைகள், வௌவால்களைக்கூட நீரிலிருந்து மேல்நோக்கிப் பாய்ந்து பற்றிப் பிடித்து இரையாக்கிக்கொள்ளும் இந்த ராட்சத முதலை குறித்து அப்பகுதியில் ஏற்கனவே பேசப்பட்டு வந்தது. ப்ரூட்டஸ்ஸின் இந்த வேட்டையாடும் திறமை காரணமாக 'பாயும்



முதலை' (Jumping Crocodile) என இதற்கு மற்றுமொரு பெயரும் உண்டு.


சுறாக்களைப் பிடித்து இரையாக்கிக் கொள்ளல், ப்ரூட்டஸ்ஸின் ராட்சதத் தோற்றம், மேல்நோக்கிப் பாயும் திறமை என்பனவற்றுக்காக மட்டும் ப்ரூட்டஸ் புகழ்பெற்று விளங்கவில்லை. மாறாக, உலகின் கவனம் அதன்பக்கம் திரும்புவதற்கான மற்றுமொரு காரணமும் உள்ளது. அதுதான் ப்ரூட்டஸ் தனது முன்னங்காலொன்றை இழந்திருப்பதாகும். சுறாவொன்றை இரையாக்கிக்கொள்ளும் பொருட்டு, அதனுடன் நடந்த சண்டையின்போதே, ப்ரூட்டஸ் தனது முன்னங்காலை இழந்திருக்கக்கூடும் எனக் கருதப் படுகின்றது.

**லிபாகர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகை அழகுபடுத்துபவர்களும் எதிர்கால உலகை வழிநடத்துபவர்களும் சிறுவர்களே. எனவே, சிறுவர்கள் குறித்துப் பேசுவதற்கும் சிறுவர்களின் பாதுகாப்புக் குறித்து திட்டமிடுவதற்கும் அதனை செயல்படுத்துவதற்கும் எல்லா பெரியோர்களும் தயாராகவே உள்ளனர். அந்தவகையில், 'ஒக்டோபர் முதலாம் திகதி' என்பது சிறுவர்களுக்கு மிகவும் முக்கியமானதொரு நாள். அதுதான் 'உலக சிறுவர் தினம்' ஆகும். ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த நாளில், சிறுவர்கள் குறித்து ஏராளமான விடயங்கள் பேசப்படுவதோடு, அவர்கள் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.



# இதோ! சிறுவர்களாகிய

### சிறுவர்களைப் பாதுகாக்கும் பிரகடனம்

சிறுவர்களின் நலன் குறித்து ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுவர் குறித்த கொள்கைப் பிரகடனமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



54 வாக்கியங்களைக் கொண்ட இந்த கொள்கைப் பிரகடனம் 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இந்த பிரகடனத்தில் சிறுவர்களின் பாதுகாப்பிற்கும் உரிமைகளுக்கும் அபிவிருத்திக்கும் தேவையான, முக்கியமான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 'சிறுவர்கள்' என்போர் யாவர்?

'சிறுவர்கள்' என்போர் யாவர்? என்பதை எளிமையாக அடையாளப்படுத்துவதாயின், 18 வயதிற்குக் குறைவான ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் அனைவரும் இப்பிரிவுக்குள் அடங்குவர். 'சிறுவர்' என்ற இந்த பிரிவுக்குள் இனம், மதம், குலம் என்ற பேதம் எதுவும் அடங்குவதில்லை.

### சிறுவர் உரிமைகள்

சிறுவர் பிரகடனத்தின்மூலம் சிறுவர்களின் நான்கு முக்கியமான உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. அவையாவன;

1. வாழும் உரிமை சிறுவர்களுக்கு இருக்க வேண்டும்.
2. அபிவிருத்தி அடையும் உரிமை சிறுவர்களுக்கு இருக்க வேண்டும்.
3. பாதுகாக்கப்படும் உரிமை சிறுவர்களுக்கு இருக்க வேண்டும்.
4. பங்குபற்றும் உரிமை சிறுவர்களுக்கு இருக்க வேண்டும்.

### சிறுவர்களுக்கும் உரிமை

'உரிமைகள்' என்பது சிறுவர்களுக்கும் பொதுவானதாகும். அந்த உரிமைகள் சிறுவர்களின் நலன் கருதியே தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த உரிமைகள் யாவும் குழந்தைகள் இவ்வுலகில் பிறப்பதற்கு முன்பிருந்தே அவர்களுக்கு உரித்துடையவை. இந்த உரிமைகளில் உடல் மற்றும் உள வளர்ச்சிக்குத் தேவையான போஷாக்கை உரிய முறையில் பேணல், சிறந்த சுகாதார மற்றும் ஆரோக்கிய வாழ்வைப் பேணல், குறிப்பிட்ட வயது எல்லையில் பெறவேண்டிய நோய்த் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளல், பெற்றோர்களுடன் இணைந்து சிறந்த சுகாதார பழக்கவழக்கங்களை அறிந்து செயல்படுதல், சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்ளல் போன்ற பல்வேறுபட்ட உரிமைகளும் அடங்குகின்றன. அதற்கமையவே, ஒரு பிள்ளைக்கு ஆறு வயதில் இருந்து பதினாறு வயது வரை பாடசாலைக்குச் செல்வது குறித்து அரசு கட்டாயப்படுத்தி வருகின்றது. அவ்வாறே; சிறுவர்களின் முன்னேற்றம், நன்மை, நலன்சார் விடயங்கள் குறித்த தீர்மானங்களை எடுக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதில் பங்குபற்றும் உரிமை சிறுவர்களுக்கும் உண்டு.



### சிறுவர்களை தொந்தரவு செய்யாதீர்...

அண்மைய காலத்திலிருந்து சிறுவர்களுக்கு எதிராக பல்வேறு முறைகேடான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் சர்வ சாதாரணமாக கேள்விப்படுகிறோம். சிறுவர்களின் உடல் மற்றும் உள விருத்திக்கு கேடு விளைவிக்கும் வகையில், வளர்ந்தோர்களால் மேற்கொள்ளப்படும் அநாகரிக செயற்பாடுகளை 'சிறுவர் துஷ்பிரயோகம்' என அர்த்தப்படுத்தலாம். 'உடல் ரீதியான துஷ்பிரயோகம்' என்பது தாக்குதல், வயதுக்கு மீறிய உடல் உழைப்பை பெறல், பாலியல் ரீதியான தொந்தரவுகள், வியாபாரத்தில் ஈடுபடுத்தல் போன்றவற்றைக் குறிக்கும். உதாசீனப்படுத்தல், தாழ்த்திப் பேசுதல், தனிமைப்படுத்துதல் போன்றவற்றை உள ரீதியான துஷ்பிரயோகத்தில் அடக்கலாம்.

### சிறுவர் தினத்தின் தோற்றம்

1914 இல் ஆரம்பமாகி 1918 இல் நிறைவுபெற்ற முதலாவது உலக மகா யுத்தமானது, உலகம் முழுவதையும் உலுக்கிய ஒரு முக்[illegible] நிகழ்வாகும். உலக யுத்தம்



### ஒக்டோபர் 01: உலக சி

காரணமாக பெருந்தொகையானோர் உயிரிழந்ததோடு, மேலும் பெரும் தொகையானோர் அங்கவீனமுற்றனர். அதிலும், குறிப்பாக சின்னஞ்சிறார்களுக்கு



ஏற்பட்ட
றவை ஆ
களுக்கு
கள் குறி
'எங்லன்
பெண்ம
கொண்ட
டனத்தை
ஐக்கிய
உலகம்
விதத்தில்
மாக அது
யுத்தம்
மீண்டும்
தால் பத்
சிறுவர் உ
இரண்ட
னம் வெ
1979
சர்வதேச
உரிமைக
டன. ஐக்
ஏற்றுக்
சர்வதேச
றப்பட்ட
ஜூலை
இ[illegible]
கு[illegible]
பம் இட்
ஒக்டோ
உலக சி
டுத்தப்ப

### எப்பே

சிறுவர்
விற்கோ
கேடு வி

விளைவி
செயலே
ர[illegible]மே
அதனை

பூரண உ
களுக்கு
சிறுவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட பாதிப்புகள் எண்ணற்றவை ஆகும். அன்று இச்சிறுவர்களுக்கு ஏற்பட்ட மேற்படி சேதங்கள் குறித்து பெருந்துயர் அடைந்த 'எங்லன்டைன் ஜெப்' எனும் பெண்மணி, ஐந்து பிரிவுகளைக் கொண்ட சிறுவர் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தார். பின்னர் ஐக்கிய நாடுகள் சபையினரால் உலகம் முழுவதும் செயற்படுத்தும் விதத்திலான கொள்கைப் பிரகடனமாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. யுத்தம் முடிவடையாத பகுதிகளில் மீண்டும் ஐக்கிய நாடுகள் தாபனத்தால் பத்து பிரிவுகளுடன் கூடிய சிறுவர் உரிமை சம்பந்தமான இரண்டாவது கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

1979 ஆம் ஆண்டளவில் சர்வதேச சிறுவர் வருடம் மற்றும் உரிமைகள் என்பன வரையப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபை அதனை ஏற்றுக்கொண்டதை அடுத்து, சர்வதேச சட்டமாக அது நிறைவேற்றப்பட்டது. 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி இலங்கையும் இந்த உரிமைகள் குறித்து ஏற்றுக்கொண்டு கையொப்பம் இட்டதோடு, இலங்கையில் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி உலக சிறுவர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

## எப்போதும் அவதானமாக இருங்கள்

சிறுவர்களின் ஆரோக்கிய வாழ்விற்கோ அல்லது வளர்ச்சிக்கோ கேடு விளைவித்த அல்லது கேடு விளைவிக்கக்கூடிய எந்தவொரு செயலேனும், எவரேனும் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டால், அதனை எதிர்க்க சிறுவர்களுக்குப் பூரண உரிமை உண்டு. சிறுவர்களுக்கு தீங்கு விளைவிப்போரும் சிறுவர்களை உதாசீனப்படுத்துவோரும் எம்மத்தியிலும் எம்மைச் சூழவும் இருந்துகொண்டுதான் இருக்கின்றனர். எனவே, சிறுவர்கள் எப்போதும் தம்மைச் சூழ இருப்பவர்கள் குறித்து அவதானத்துடனும் விழிப்புடனும் இருக்க வேண்டும். யாராக இருந்தாலும் அவர்கள் எந்தவோர் அசாதாரண நடவடிக்கைகளையும் சிறுவர்களை நோக்கி மேற்கொள்ள ஆயத்தமானாலும் அது குறித்து உங்கள் எதிர்ப்பை தாமதியாது வெளிப்படுத்துங்கள்.

**அத்துடன், எப்போதும் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.**

✸ பாதுகாப்பற்ற மற்றும் தனிமையான இடங்களில் நடமாடுவதை தவிருங்கள்.

✸ உங்களை அசௌகரியப்படுத்தும் வகையில் ஏதும் நடந்தாலோ அல்லது பார்த்தாலோ அதுபற்றி உங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் கூறுங்கள்.


✸ ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் ஓர் இடத்தில் பாதுகாப்பற்ற தன்மையை நீங்கள் உணர்ந்தால், உடனே அவ்விடத்தில் இருந்து வெளியேறுங்கள்.

✸ யாராவது ஒருவர் உங்களை தவறான செயலுக்கு வற்புறுத்தினால், அதற்கு உங்கள் வெறுப்பை வெளிப்படுத்துங்கள்.

## சிறுவர் உழைப்பிற்கு தடை விதிப்போம்

சிறுவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தொழிலாளியாக செயல்பட முடியாது. சிறுவர்களின் ஆரோக்கியத்திற்கோ உடல், உள, ஆன்மீக, நல்லொழுக்க மற்றும் சமூக அபிவிருத்திக்கோ தீங்கு விளைவிக்கும் ஏதாவதொரு செயற்பாட்டில் இருந்து பிள்ளைகளை பாதுகாக்க வேண்டியது குறித்து சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





## கார்ல் மார்க்ஸின் கருத்து

கார்ல் மார்க்ஸ் எனும் ஜேர்மனிய அறிஞர், சிறுவர்கள் குறித்து நான்கு முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

1. சிறுவர்கள் கல்வியைப் பெறுவது கட்டாயமானதாகும்.
2. பாடசாலைப் பருவத்தில் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்தக்கூடாது.
3. உற்பத்திமூலத்தின் எண்ணக்கரு மற்றும் பயிற்சி என்பன அடிப்படைக் கல்வியில் இருந்தே சிறுவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
4. பாடசாலையில் பெறும் சம்பிரதாய தரமான கல்விக்கு மேலதிகமாக, கைகளைப் பயன்படுத்திச் செய்யும் வேலைகளுக்கும் சிறுவர்களைப் பழக்க வேண்டும்.

**இரஞ்சித் ஜெயகர்**

# கிய எமது தினம்

## 01: உலக சிறுவர் தினம்

து உலக
ம் முழுவ
...ச்
ம்

...யானோர்
ம் பெரும்
வீனமுற்ற



### சிறுவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள முக்கிய தினங்கள்

ஜனவரி 4 - சிறுவர் குரூரங்களுக்கு எதிரான சர்வதேச தினம்

ஜூன் 12 - சிறுவர் தொழிலுக்கு (உழைப்பிற்கு) எதிரான சர்வதேச தினம்

ஒக்டோபர் 01 - உலக சிறுவர் தினம்

ஒக்டோபர் 11 - சிறுமிகள் தினம்

நவம்பர் 20 - சர்வதேச சிறுவர் தினம்

*எந்தவொரு வடிவிலாவது நீங்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியிருந்தால், எந்தவகையிலும் அது உங்கள் தவறல்ல. உங்களை துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கிய நபரே, அந்த குற்றத்திற்குரியவராவார். ஆகையால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் உங்களை குற்றம் செய்தவராக நினைக்காதீர்கள். அவ்வாறே வேறு எவரும் உங்கள்மீது இந்த குற்றத்தை சுமத்துவதற்கு இடம் கொடுக்காதீர்கள்.*

**உங்களுக்கு செவிமடுப்பதற்கும், உங்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கும், 24 மணித்தியாலமும் உங்களுடன் கதைப்பதற்கு நாம் தயார். பேசுங்கள்:**




'ஹலோ நண்பா' கையேடு அடுத்த வாரம் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆந்தைகள், 'strigiformes' வரிசையைச் சேர்ந்தவையாகும். இவை சிறிய பாலூட்டிகள், பூச்சிகள் மற்றும் சிறிய பறவைகள் என்பனவற்றை இரையாகக்கொள்ளும். பகல் முழுவதும் கண்களுக்குப் புலப்படாதவாறு அடர்ந்த மரக்கிளைகளுக் கிடையே ஒளிந்து உறக்கத்தில் இருக்கும் ஆந்தைகள், இரவானதும் வெளியில் தலைகாட்டி இரைதேடி தமது பயணத்தை ஆரம்பிக்கும்.

# பகலில் மறைந்திருந்து இரவில் சஞ்சரிக்கும் 'ஆந்தை'



காரிருள் வேளையில் செயல்படும் ஆந்தையின் இருப்பை அறிந்துகொள்ள எமக்கிருக்கும் ஒரே ஒரு வாய்ப்பு அது எழுப்பும் ஒலியாகும். அமைதியான இரவு வேளையில் பெரும்பாலும் காட்டுப்பகுதிகளில் ஆந்தைகளின் ஒலி கேட்கும். ஆந்தை எழுப்பும் ஒலியினை சிலர் கெட்ட சகுணமாகக் கருதுகின்றனர். இன்னும் சிலர் அது யாரோ ஒருவரின் மரணத்தின் முன் அறிகுறி என நம்புகின்றனர்.

உலகில் பெரும்பாலானோர் இவ்வாறு எண்ணும் வேளையில், புராதன கிரேக்கர்களோ, ஆந்தைகளை விவேகத்தின் குறியீடாகக் கருதினர். உலகின் அனைத்து வலயங்களிலும் ஆந்தைகள் வாழ்கின்றன. பனிபொழியும் ஆர்க்டிக் பிரதேசங்களில் வாழும் ஆந்தைகளின் இறக்கைகளும் பனிபோலவே வெண்மையாக இருக்கும்.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் வாழும் ஆந்தைகள் நெற்குருவிகளின்



உடலமைப்பிற்கு சமமானதோர் உருவ அமைப்பைக் கொண்டுள்ளன. புல் மற்றும் வண்டுகளே இவற்றின் உணவுகளாகும். ஆந்தை இரவில் சஞ்சரிக்கும் ஒரு பறவையினம் என்பதால், இரவு நேரத்தில் இயங்குவதற்கு ஏற்றவாறே அதன் உடல் அமைப்பும் அமைந்துள்ளது. அத்துடன், அதற்கேற்றாற்போலவே அதன் குரலும் அமைந்துள்ளது. இரவு வேளைகளில் அச்சத்தை உணர்த்தும் வகையில் அது எழுப்பும் ஒலியைக் கேட்கும் பொழுது, அருகில் இருக்கும் மிருகங்களும் நடுநடுங்கும்.



மிகக் குறைந்த சத்தத்தையும்கூட கேட்கும் அளவுக்கு ஆந்தையின் காதுகள் கூர்மையானவை. சில ஆந்தைகளின் காதுகளுக்கருகில் தெளிவாகக் கேட்பதற்கு உதவும் விசேட பகுதி ஒன்று உள்ளது. அது இறகுகளால் உருவானதாகும். ஆந்தையின் கண்கள், அவற்றுக்குரிய குழிகளில் நிலையாகப் பொருத்தப்பட்டுள்ளன. இதனால், பார்வையை செலுத்த வேண்டிய திசைக்கேற்ப, அதன் தலையை 270 பாகைகள் வரை திருப்ப ஆந்தையால் முடியும். அத்தோடு, தனது பார்க்கும் சக்தியை கூட்டிக் குறைக்கவும் முடியும். அதனால் தான் இரவு வேளைகளில் நிலவும் மந்தமான-மங்கலான ஒளியிலும் அதனால் தெளிவாகப் பார்க்க முடிகின்றது.

(அ)



மரப்பட்டைகளின் இடுக்குகளில் காணப்படும் புழு மற்றும் பூச்சிகளை உண்பதற்காகவே மரங்கொத்திப் பறவைகள் மரங்களைக் கொத்துகின்றன. தவிர, மரத்தில் பொந்துகளை அமைத்து குடியிருக்கவும் இவ்வாறு செய்கின்றன. ஒரு மனிதன், சுவரில் ஆணியை அடிக்க எவ்வளவு பலத்தை உபயோகிப்பானோ, அவ்வளவு பலத்தைப் பயன்படுத்தி மரங்கொத்திப் பறவைகள் மரத்தைத் துளையிடுகின்றன.

மரங்கொத்திகள் துளையிடுவதற்கு பெரும்பாலும் 'பைன்' (Pine) மரத்தையே தேர்ந்தெடுக்கின்றன. அவ்வாறு தேர்ந்தெடுக்கும் மரத்திற்கு *100* வயதிற்கு மேற்பட்டதாக இருக்கும். ஏனெனில், *100* வயதிற்கு மேற்பட்ட பைன் மரங்களுக்கு ஒருவித நோய் ஏற்படுவதனால், அவற்றின் தடிப்பான மரப்பட்டைகள் மிருதுவாகிவிடுகின்றன. பைன் மரத்தை மரங்கொத்திகள் தேர்ந்தெடுப்பதற்கு இன்னொரு காரணமும் இருக்கின்றது. அதாவது, பைன் மரத்தை அவை கொத்தும்போது, பைன் மரத்திலிருந்து வடியும் பிசின், அவற்றின் கூட்டில் நிரம்பி சிறுகுளம் போலாகி விடுகின்றது. இந்தப் பிசின் மரங்கொத்திப் பறவைகளின் எதிரியான பாம்புகளிடமிருந்து அவற்றுக்குப் பாதுகாப்பை அளிக்கின்றது.



மரங்கொத்திப் பறவைகளின் கண்கள், எலும்புகள் என்பன திசுக்களால் அழுத்தமாக சூழப்பட்டுள்ளதால், மரங்களைக் கொத்தும் போது அவற்றிற்கு எவ்வித அதிர்வோ, பாதிப்போ ஏற்படுவதில்லை.

# மரங்கொத்திப் பறவை, மரத்தைக் கொத்துவது ஏன்?





இப்பறவைகளின் கண்களுக்கு மேலாக இமையை திறந்து மூடும் வகையில் அமைந்துள்ள ஒரு படலமானது, அவை மரங்களைக் கொத்தும்போது தெறிக்கும் மரச்சிராய், மரத்துகள்களில் இருந்து அவற்றின் கண்களைப் பாதுகாக்கின்றது.

அத்துடன், இதன் தலைப்பகுதியும் மரங்களைக் கொத்துவதற்கு ஏற்றாற்போல் அமைந்துள்ளது. அற்புதமான உடலமைப்பு மற்றும் பாதுகாப்பு கவசங்களை இப்பறவையினம் இயற்கையிலேயே பெற்றுள்ளதனால், எவ்வித வலி, வேதனை, பாதிப்பு என்பன இல்லாமல் மரங்களைக் கொத்தி தங்களின் உணவுத் தேவையை நிறைவுசெய்துகொள்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக இருளைப் போக்கி ஞானஒளி ஏற்றும் ஆசிரியர்கள்

'ஆசிரியப் பணியே அறப்பணி; அதற்கே உன்னை அர்ப்பணி!' என்ற சொற்றொடருக்கிணங்க, சமுதாயத்தின் வழிகாட்டியாகத் திகழும் ஆசிரிய பெருந்தகையினரைக் கௌரவிக்க உலகம் வழங்கிய தினமே ஆசிரியர் தினமாகும். கடந்த காலத்தில் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலினால் இன்று வாழ்வில் உயர்நிலையை அடைந்திருக்கும் ஒவ்வொருவரும் தமது ஆசிரியரை நன்றியுடன் நினைவுகூருவதற்கும் வாழ்த்துவதற்குமான மகத்தான வாய்ப்பினை இந்த ஆசிரியர் தினம் எமக்கு வழங்கியுள்ளது.

ஆசிரியர் பணியானது, உலகிலேயே மிகவும் மகத்தானதும் கௌரவத்திற்குரியதுமான பணியாகும். கல்வியினூடாக சிறந்த நற்பிரஜையை உலகிற்கு வழங்கும் பாடசாலை-வகுப்பறை கல்வி முகாமையாளராக ஆசிரியர் திகழ்கிறார். ஆசிரியரானவர் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் கண்ணும் கருத்துமாக இருந்து சேவையாற்றுவதன் காரணமாக, இன்று ஆசிரியர் பதவியை 'ஆசிரியர் சேவை' என்றே அழைக்கின்றோம்.

## உலக ஆசிரியர் தின பிரகடனம்

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு (UNESCO) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ICO) ஆகியன இணைந்து 1994 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய, 1994 ஆம் ஆண்டிலிருந்து ஒக்டோபர் 05 ஆம் திகதி 'உலக ஆசிரியர் தினம்' என பிரகடனம் செய்யப்பட்டது. எனினும், இலங்கையில் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதியே ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.



ஆசிரியர்களின் மகத்துவத்தை வருங்காலச் சந்ததியினரும் உணரும் விதமாக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்குடன் உலகெங்கிலும் இத்தினங்களில் வைபவங்கள் நடைபெறு

## உலக ஆசிரியர் தினம் - ஒக்டோபர் 05

கின்றன. யுனெஸ்கோ சாசனம் ஆசிரியர் எனும் சொல்லுக்கு, 'பாடசாலையில் மாணவ-மாணவியரின் கல்வி தொடர்பான பொறுப்பினைத் தாங்கும் அனைவரும் ஆசிரியர்' என அர்த்தம் கற்பிக்கின்றது.

## ஆசிரியர்களின் மகத்துவம்

எதுவுமே அறிந்திராத பச்சிளம் பாலர் பருவத்தில் ஒரு பிள்ளையின் வாழ்க்கைப் பயணத்திற்கான முதல் அத்திவாரம் ஓர் ஆசிரியரால்தான் இடப்படுகின்றது. அத்தகைய, குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் மிகவும் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் தியாக மனப்பான்மையுடனும் செயற்பட்டு கல்வியோடு நற்பழக்கவழக்கங்களை புகட்டுவதுடன், நற்பிரஜைகளாகவும் உருவாக்குகின்றனர். பாடசாலைப்பருவத்தில் ஆசிரியர்கள் புகட்டும் அறிவுதான் ஒவ்வொரு மனிதனதும் வாழ்வின் இறுதிவரை அவனுக்கு துணை நிற்கின்றது.

## இலங்கையில் ஆசிரியர் சேவை

இலங்கையில் இன்று சுமார் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களின் எதிர்கால நல்வாழ்க்கையை தீர்மானிக்கின்ற, நல்வழிப்படுத்துகின்ற புனிதப் பணியில் சுமார் இரண்டு லட்சத்து முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இலங்கையில் அரச பாடசாலைகளின் தொகை பத்தாயிரத்தை அண்மித்துள்ளது. இலங்கையில் உள்ள தொழில்களில் பாரியளவிலான மனித வளங்களை தன்னகத்தே கொண்டுள்ள துறையினராக ஆசிரியர்கள் விளங்குகின்றனர்.

## நல்லாசிரியரின் பண்புகள்

ஒரு நல்லாசிரியர் என்பவர் பின்வரும் பண்புகளைக் கொண்டவராக திகழ்கின்றார். அதிபருக்கு சிறந்த ஒத்துழைப்பை வழங்குபவர்; ஆசிரிய குழாத்தோடு சிறந்த தொடர்பினைக் கொண்டவர்; மாணவர்களின் சிறந்த தொடர்பினைக் கொண்டவர்; மாணவர்களின் சிறந்த ஆலோசகர்; பெற்றோர், நலன்புரிகளுடன் உயர்ந்த தொடர்பாடலை பேணுபவர்; கற்பித்தலை முன் ஆயத்தத்துடன் மேற்கொள்பவர்; தமது தொழில் சார் திறன்களை மேன்படுத்த முனைபவர்; மாணவர் மற்றும் பாடசாலையின் விருத்திக்காக உயர் அர்ப்பணிப்புகளைச் செய்பவர். இவ்வாறான உன்னத ஆசிரியர்களை பாடசாலை மட்டத்திலும் சமூக மட்டத்திலும் பாராட்டிக் கௌரவப்படுத்துவது அனைவரதும் கடமையாகும்.

**இரஞ்சித் ஜெயகர்**

## 'ஆபிரகாம் லிங்கன்' தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதம்...

*எல்லா மனிதரும் நீதிமான்கள் அல்ல,*
*எல்லா மனிதரும் உண்மையானவர்*
*அல்ல,*
*என்பதை அவன் அறிந்துகொள்ள*
*வேண்டும்,*
*ஆனாலும், ஒவ்வொரு பொறுக்கிக்கும்*
*ஒரு சிறந்த நாயகன் விகிதம்*
*இருக்கிறான்;*
*ஒவ்வொரு சுயநல*
*அரசியல்வாதிக்கும் ஒரு*
*அர்ப்பணிப்புள்ள தலைவன்*
*இருக்கிறான்...*
*ஒவ்வொரு எதிரிக்கும் ஒரு நண்பன்*
*இருக்கிறான்;*
*என்பதையும் அவனுக்கு*
*கற்றுக்கொடுங்கள்!*

*அவனை பொறாமையுணர்விலிருந்து,*
*விலக்கிக் கொள்ளச் சொல்லுங்கள்,*
*முடிந்தால், அமைதியான சிரிப்பின்*
*ரகசியத்தைக் கற்றுக்கொடுங்கள்...*
*கேலி செய்வோரை தாண்டிச்*
*செல்வது,*
*மிக இலகுவானது என்பதை*
*அவன் அறிந்துகொள்ளட்டும்!*

*புத்தகம் எனும் அற்புத உலகை*
*அவனுக்கு திறந்து காட்டுங்கள்...!*
*அதே சமயம், வானில் கோலமிடும்,*
*பறவைகளின் மர்மங்களையும்,*
*பச்சை மலை வெளியில்,*
*பூத்திருக்கும் மலர்களையும்,*
*சூரிய கதிரிடையே,*
*ரீங்காரமிடும் தேனீக்களையும்,*
*ரசிக்கக் கற்றுக்கொடுங்கள்!*

*தோல்வியடைவது,*
*ஏமாற்றுவதிலும் பார்க்க,*
*மேலானது என்பதை*
*புரியவையுங்கள்.*

*தன் சொந்த சிந்தனைகள்*
*மேல் நம்பிக்கை கொள்ள*
*அவனுக்கு கற்றுக்கொடுங்கள்*
*மென்மையானவர்களுடன்,*
*மென்மையாகவும்,*
*முரடர்களுடன்,*
*கடினமாகவும் நடந்துகொள்ள*
*அவனுக்கு பயிற்சிகொடுங்கள்!*

*கும்பலோடு கும்பலாக*
*கலந்துவிடாமல்,*
*தனித்துநிற்கும் தைரியத்தை*
*அவனுக்கு ஊட்டுங்கள்!*
*எல்லோருடைய கருத்துக்களுக்கும்*
*செவிகொடுக்க கற்றுக்கொடுங்கள்!*
*ஆனால், அவற்றை உண்மை எனும்*
*சல்லடையில் வடிகட்டி,*
*நல்லதை மட்டுமே*
*உள்வாங்க சொல்லிக்கொடுங்கள்!*
*துயரத்தில் சிரிக்கும்*
*வித்தையைக் கற்றுக்கொடுங்கள்!*
*அழுவதில் வெட்கப்பட*
*எதுவுமில்லை என்பதையும்*
*கற்றுக்கொடுங்கள்!*

*அளவுகடந்த இனிமையில்*
*ஆபத்து இருப்பதை*
*அவனுக்கு புரியவையுங்கள்!*
*அறிவையும், உழைப்பையும்*
*பெறுமதி தெரிந்த இடத்தில்*
*மட்டும் பிரயோகிக்கவும்,*
*மனதும், ஆன்மாவும்*
*விலைபோகக் கூடாது*
*என்பதையும் புரியவையுங்கள்!*

*ஏளன ஒலிகளுக்கு*
*காதை மூடிக்கொள்ளவும்,*
*நியாயத்திற்கு உறுதியாய்*
*போராடவும் கற்றுக்கொடுங்கள்!*

*மென்மையாகக் கற்றுக்கொடுங்கள்*
*ஆனால், செல்லம் கொடுத்து*
*விடாதீர்கள்*
*கடும் நெருப்புத்தான்*
*இரும்பை வலிதாக்கும்.*

*வேகமாய், துணிந்து*
*செயல்படத் தேவையான*
*விவேகத்தை*
*அவனுக்குக் கொடுங்கள்.*
*அவன் முதலில்*
*தன்மீது நம்பிக்கை*
*கொள்ளட்டும்...*
*அப்போதுதான்,*
*மனிதகுலத்தின் மீது*
*அவனுக்கு நம்பிக்கை*
*பிறக்கும்...*

*இது ஒரு பெரிய*
*பொறுப்புத்தான்...*
*நான் அறிவேன்;*
*இவற்றில் எவையெல்லாம்*
*உங்களால் முடியுமோ,*
*அவற்றை அவனுக்கு*
*கற்றுக்கொடுங்கள்.*

என் மகன்
அவன் ஒரு நல்ல மைந்தன்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் கமலுக்கும் ராஜாவுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**කමල්: රාජා! ඔයා අද පාසල් එන්න පරක්කු වුනේ ඇයි?**
ராஜா! ஒயா அத பாசல் என்න பரக்கு வுனே எய்?
கமல்: **ராஜா! நீங்கள் இன்று பாடசாலை வரத் தாமதமானது ஏன்?**

**රාජා: අද උදේ අනතුරක් උනානේ.**
அத உதே அனதுரக் உனானே.
ராஜா: **இன்று காலையில் ஒரு விபத்து நடந்ததுதானே.**

**කමල්: ඒ කවුද? ඔයා දන්න කෙනෙක්ද?**
ஏ கவுத? ஒயா தன்ன கெனெக்த?
கமல்: **அது யார்? உங்களுக்குத் தெரிந்தவரா?**

**රාජා: නැහැ කමල්.**
நெஹெ கமல்.
ராஜா: **இல்லை கமல்.**

**කමල්: එහෙනම් මොකද උනේ?**
எஹெனம் மொகத உனே?
கமல்: **அப்படியென்றால் என்ன நடந்தது?**

**රාජා: අද උදේ මම පාරේ එනකොට මෝටර් සයිකලයක් කාරෙකක හැප්පුණා.**
அத உதே மம பாரே எனகொட்ட மோட்டர் சய்கலயக் காரெகக ஹெப்புணா.
ராஜா: **இன்று காலை நான் பாதையில் வரும்போது, மோட்டார் சைக்கிளொன்று காரொன்றுடன் மோதியது.**

**කමල්: එතකොට මෝටර් සයිකලයේ එක්කෙනාට හුඟක් තුවාලද?**
எதகொட்ட மோட்டர் சய்கலயே எக்கெனாட்ட ஹுங்கக் துவாலத?
கமல்: **அப்படியென்றால் மோட்டார் சைக்கிளில் வந்தவருக்கு நன்றாகக் காயமா?**

**රාජා: ඔව්, එයාට නම් හුඟක් අමාරුයි වගේ.**
ஒவ், எயாட்ட நம் ஹுங்கக் அமாருய் வகே.
ராஜா: **ஆம், அவருக்கென்றால் மிகவும் வருத்தம் போல.**

**කමල්: ඔයා ළඟට ගිහින් බැලුවාද?**
ஒயா லங்கட்ட கிஹின் பெலுவாத?
கமல்: **நீங்கள் அருகில் போய்ப் பார்த்தீர்களா?**

**රාජා: ඔව්, මම ළඟට ගිහින් බැලුවා. එයාට නම් හොඳටම තුවාල. හරියට ලේ ගිහින්. පාරේ යන වාහනයකින් එයාව රෝහලට යැව්වා.**
ஒவ், மம லங்கட்ட கிஹின் பெலுவா. எயாட்ட நம் ஹொந்தட்டம துவால. ஹரியட்ட லே கிஹின். பாரே யன வாஹனயகின் எயாவ ரோஹலட்ட யெவ்வா.
ராஜா: **ஆம், நான் அருகில் போய்ப் பார்த்தேன். அவருக்கு நன்றாகக் காயம். மிகவும் இரத்தம் வெளியேறியிருந்தது. பாதையில் சென்ற வாகனமொன்றில் அவரை வைத்தியசாலைக்கு அனுப்பினோம்.**

## பயிற்சி

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. பாடசாலை வரத் தாமதமானது ஏன்?
.......................................................................
ii. அருகில் போய்ப் பார்த்தீர்களா?
.......................................................................
iii. வைத்தியசாலைக்கு அனுப்பினோம்.
.......................................................................






**Have to** அல்லது **Has to** எனும் வினைச்சொல்லுடன், ஏதாவதொரு மூல வினைச் சொல்லை (Stem Verb) கையாண்டு அமைக்கப்படும் உடன்பாடு வாக்கியங்களை (Affirmative Sentence) மேலும் இங்கே அவதானிப்போம்.

அ) I have to participate in that function.
நான் அந்த வைபவத்தில் பங்குபற்ற வேண்டியுள்ளது.

ஆ) You have to borrow some money.
நீ கொஞ்சம் பணம் கடன்வாங்க வேண்டியுள்ளது.

இ) We have to get the permission.
நாங்கள் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது.

ஈ) They have to count the money again.
அவர்கள் அந்தப் பணத்தை மீண்டும் எண்ண வேண்டியுள்ளது.

* I have to participate.
நான் பங்குபற்ற வேண்டியுள்ளது.
* You have to borrow.
நீ கடன்வாங்க வேண்டியுள்ளது.
* We have to get.
நாங்கள் பெற வேண்டியுள்ளது.
* They have to count.
அவர்கள் எண்ண வேண்டியுள்ளது.

அ) He has to arrange the classroom.
அவன் வகுப்பறையை ஒழுங்குசெய்ய வேண்டியுள்ளது.

ஆ) She has to organize the meeting.
அவள் கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது.

இ) It has to creep through the window.
அது ஜன்னல் ஊடாக ஊர்ந்துசெல்ல வேண்டியுள்ளது.

ஈ) This snail has to creep through the window.
இந்த நத்தை ஜன்னல் ஊடாக ஊர்ந்து செல்ல வேண்டியுள்ளது.

* He has to arrange.
அவன் ஒழுங்குசெய்ய வேண்டியுள்ளது.
* It has to creep.
அது ஊர்ந்து செல்ல வேண்டியுள்ளது.
* She has to organize.
அவள் ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது.
* This snail has to creep.
இந்த நத்தை ஊர்ந்து செல்ல வேண்டியுள்ளது.

உ) Nimalan has to clean the table.
நிமலன் மேசையை சுத்தம்செய்ய வேண்டியுள்ளது.

ஊ) Nadeeka has to pay the full amount.
நதீகா முழுத் தொகையையும் செலுத்த வேண்டியுள்ளது.

எ) This train has to stop at every station.
இந்த ரயில் ஒவ்வொரு நிலையத்திலும் தரித்துநிற்க வேண்டியுள்ளது.

* Nimalan has to clean.
நிமலன் சுத்தம்செய்ய வேண்டியுள்ளது.
* Nadeeka has to pay.
நதீகா செலுத்த வேண்டியுள்ளது.
* This train has to stop.
இந்த ரயில் தரித்துநிற்க வேண்டியுள்ளது.
* It has to fly.
அது பறக்க வேண்டியுள்ளது.

ஏ) It has to fly over the coconut tree.
அது தென்னை மரத்தின் மேலாகப் பறக்க வேண்டியுள்ளது.


ஐ) This bird has to fly over the coconut tree.
இந்தப் பறவை தென்னை மரத்தின் மேலாகப் பறக்க வேண்டியுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இந்துக்களால் அனுஷ்டிக்கப்படுகின்ற மிக முக்கிய விரதங்களில் ஒன்றான நவராத்திரி விரதம் புரட்டாதி மாதம் பிரதமை திதியில் ஆரம்பித்து, நவமி திதி வரை ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்தவகையில், இந்த வருடம் செப்டெம்பர் 24 ஆம் திகதி தொடங்கிய நவராத்திரி விரதம் ஒக்டோபர் 3 ஆம் திகதி விஜயதசமியுடன் நிறைவுபெறுகின்றது.**



# நவராத்திரி விழா

நவராத்திரி விரதத்தின் முதல் மூன்று நாட்கள் துர்க்கா தேவியைக் குறித்தும் அடுத்த மூன்று நாட்கள் லக்ஷ்மி தேவியைக் குறித்தும் இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதி தேவியைக் குறித்தும் வழிபடுவதற்கு மிகவும் உகந்த நாட்கள் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

எருமை வடிவம் கொண்ட மகிஷாசுரன் என்ற அரக்கன் மக்களை துன்புறுத்தி வந்தமையால், தங்களைக் காப்பாற்றி அருளுமாறு அன்னை ஆதிபராசக்தியிடம் சென்று முறையிட்டனர். மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அன்னை ஒன்பது நாட்கள் போரிட்டு பத்தாவது நாள் மகிஷாசுரனை வதம் செய்து வெற்றி கொண்டாள். அந்த வெற்றியே நவராத்திரி விழாவாகும்.



துர்க்கை வீரத்திற்கும், லட்சுமி செல்வத்திற்கும், சரஸ்வதி கல்விக்கும் உரிய தெய்வங்கள் என்பதால், இவர்களை வழிபட இந்நவராத்திரி விழா தோற்றம் பெற்றது. அதன்படி, முதல் மூன்று நாட்கள் வெற்றியைத் தர வேண்டி துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்தை வேண்டி லக்ஷ்மி தேவியையும், இறுதி மூன்று நாட்கள் கல்வியை வேண்டி சரஸ்வதி தேவியையும் வழிபட வேண்டும்.

பத்தாம் நாளான 'விஜயதசமி' அன்று புதிய தொழில்களையும், கலைகளையும் கல்வியையும் (ஏடு தொடங்குதல்) ஆரம்பித்தால் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும் என்பது ஐதீகம். நவராத்திரி ஒன்பது நாட்களும் பராசக்தியை விதவிதமாக அலங்கரித்து விரதமிருந்து வழிபாடு செய்வார்கள். விதவிதமான பொம்மைக் கொலு வைத்து, சிறு குழந்தைகளையும், பெண்களையும் அழைத்து மங்களப் பொருட்களுடன், 9 நாட்களும் ஒவ்வொரு வகையான தானியங்களைப் படைத்து, அனைவருக்கும் வழங்கி மகிழ்வார்கள்.

இவ்விழா குடும்பத்தினருக்கு மட்டுமன்றி, மாணவர்களுக்கும் முக்கியமான விழாவாகும். கல்வியைத் தரக்கூடிய சரஸ்வதிதேவியை இவ்விழா முன்னிலைப்படுத்தி பாடசாலைகளிலும் கொண்டாடப்படுகின்றது.

## கொலு வைத்தல்

நவராத்திரியின்போது, வீடுகளில் கொலு வைக்கிறார்கள். பூச்சிகள், தாவரங்கள், விலங்குகள் என்னும் கீழ்நிலை பருவத்தில் இருந்து மனித பொம்மைகள், மகான்கள், தெய்வங்களின் பொம்மைகளை கொலு படிக்கட்டில் வரிசை வரிசையாக வைப்பதன் மூலம், கீழ்நிலையில் இருந்த நாம் மனிதப் பிறவிகளாக வடிவெடுத்துள்ளதை உணரவேண்டும் என்பதையும் மனிதப் பிறவி மகத்தான பிறவி, இந்தப் பிறவியில் இருந்து மீண்டும் கீழ்நிலைக்கு வந்துவிடாமல், மகான்களாகவும், தெய்வாம்சம் பொருந்தியவர்களாகவும் விளங்கி, ஆதிபராசக்தியுடன் ஐக்கியமாகிவிட வேண்டும் என்பதையும் கொலு பொம்மைகள் உணர்த்துகின்றன. கொலுவை வெறும் கண்காட்சியாக மட்டும் பார்க்காமல், வாழ்க்கையின் படிநிலையை உயர்த்தும் ஆன்மிக சிந்தனையுடனும் பார்க்க வேண்டும் என்பதே தத்துவம்.

## தெரிந்து கொள்வோம்

* பாடசாலைக்கு அதிபர் போன்று பின்வரும் நிறுவனங்களின் தலைவர்கள் யாவர்?

i. பல்கலைக்கழகம் - உபவேந்தர்
ii. வங்கி - முகாமையாளர்
iii. பிரதேச சபை - தவிசாளர்
iv. மாகாண சபை - முதலமைச்சர்

* ஆந்தை அலறுவது போல, பின்வருவன எவ்வாறு ஒலியெழுப்புகின்றன?



i. மயில் - அகவும்
ii. புறா - குறுகுறுக்கும்
iii. குரங்கு - அலப்பும்
iv. யானை - பிளிரும்

* இரு கண்டங்களுக்கும் இடைப்பட்ட நாடு எது?

ரஷ்யா



* கடலும் கடல்சார்ந்த நிலமும் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

நெய்தல்

* பான் கீ மூன் ஐ.நா.சபையின் 8 ஆவது செயலாளர் நாயகமாவார். 7 ஆவது செயலாளர் நாயகம் யார்? அவர் எந்த நாட்டவர்?



கொஃபி அனான் - கானா நாட்டவர்



* இலங்கை நாடாளுமன்ற செங்கோல் பிரித்தானிய நாடாளுமன்ற செங்கோலைப் போன்ற அமைப்பையுடையது. ஆனால், பல வகைகளில் அது வேறுபட்டது. அவ்வாறான வேறுபாடுகள் எவை?

இலங்கையின் செங்கோலில் கலை, கலாசார அம்சங்கள் அதில் புகுத்தப்பட்டுள்ளமை வேறுபாடுகளாக காணப்படுகின்றது

* இலங்கையின் 'கணினித்துறையின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?



பேராசிரியர் வி.கே.சமரநாயக

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

## விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5828
நஸீஹா நவாஸ், ஹிறிம்புர குறுக்கு வீதி, காலி.



அங். இல: 5829
ஏ.அரீப், சர்வோதய வீதி, சாய்ந்தமருது-15.



அங். இல: 5830
கே.தீவானி, ஹத்மத்த, கன்னத்தொட்ட.



அங். இல: 5831
பீ.அஹமட் அதீப், மீன்பிடி வீதி, ஓட்டமாவடி-03.



அங். இல: 5832
எம்.அனீஸ், காயர் வீதி, ஏறாவூர்-2C



அங். இல: 5833
என்.சைனப், வெதமாவத, வத்தல்பொல.



அங். இல: 5834
ஏ.அப்துல் அஸீஸ், ஹம்சா ஒழுங்கை, கொழும்பு-15.



அங். இல: 5835
ஜே.விதுர்சன், முள்ளியவளை, முல்லைத்தீவு.



அங். இல: 5836
எம்.மலித், மாகொல முஸ்லிம் அனாதை நிலையம், மல்வானை.



அங். இல: 5837
ஏ.அன்ஷப், ஹுதா நகர், கல்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில், கண்டியை ஆட்சிசெய்த மன்னர்கள்

| | |
|---|---|
| 1469 - 1511 | சேனாசம்பந்த விக்கிரமபாகு |
| 1511 - 1512 | 1 ஆம் ஜயபாகு |
| 1512 - 1552 | 2 ஆம் ஜயபாகு |
| 1552 - 1582 | கரலியத்த பண்டார |
| 1582 - 1592 | 1 ஆம் இராஜசிங்கன் |
| 1592 - 1604 | 1 ஆம் விமலதர்ம சூரியன் |
| 1604 - 1635 | செனரத் |
| 1635 - 1687 | 2 ஆம் இராஜசிங்கன் |
| 1687 - 1707 | 2 ஆம் விமலதர்மசூரியன் |
| 1707 - 1739 | வீர பராக்கிரம நரேந்திரன் |
| 1739 - 1747 | ஸ்ரீ விஜய இராஜசிங்கன் |
| 1747 - 1782 | கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் |
| 1782 - 1798 | இராஜாதி இராஜசிங்கன் |
| 1798 - 1815 | ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் |

எஸ்.தர்ஷிக்கா.
ஹைலன்ஸ் கல்.,ஹட்டன்.

# முள்ளம்பன்றி மீன் (Porcupine Fish)



முள்ளம்பன்றி மீன்கள் முருகைக் கற்பாறைகளுக்கு இடையே வாழ்கின்றன. இவற்றிற்கு தோலின் நிறத்தை உடைய என்பு போன்ற முட்கள் உடலில் காணப்படுகின்றன. நச்சுத்தன்மையுடைய இந்த முட்கள் குத்துவதால் ஏற்படும் காயங்கள் எளிதில் மாறமாட்டா. இவை வாயினுள் பற்கள் இணைந்து அலகு போன்ற அமைப்பைக் கொண்டு காணப்படுகின்றன.

இவை ஆபத்தின்போது, வயிற்றில் நீரையோ, வளியையோ நிரப்பி உடலை ஏறத்தாழ 3 மடங்கு பெரிதாக்கக்கூடியவை. அதன்போது இந்த மீன் நீரில் மிதக்கும் ஒரு தூரியன் பழம் போன்று காட்சியளிக்கும். முள்ளம்பன்றி மீன் பொதுவாக 70cm நீளமுடையது. இது முருகைக் கல் அங்கிகளையும் ஏனைய மென்பிராணிகளையும் உணவாகக் கொள்கின்றது.

எம்.ஆஷிக் அஹமட்,
மர்கஸ் அந்-நூர் அரபிக் கல்., வாழைச்சேனை.

# இராவணன் நீர்வீழ்ச்சி



மலைநாட்டின் வெலிமடை நகரை அண்மித்த 'எல்ல' எனும் பிரதேசத்திலிருந்து ஏறத்தாழ 6km தொலைவில் அமைந்துள்ள இந்நீர்வீழ்ச்சி 'பமரகம' நீர்வீழ்ச்சி என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. கிரிந்தி நதியின் மூலமாக உருவாக்கப்படும் இந்நீர்வீழ்ச்சியின் மொத்த உயரம் 40 மீற்றர்களாகும். இராவண மன்னன் தனது புஷ்பக விமானத்தை நிறுத்தி வைப்பதற்காக இந்நீர்வீழ்ச்சி உருவாகும் மலையுச்சிப் பிரதேசத்தைப் பயன்படுத்தியதாக வரலாற்று நூல்களில் கூறப்படுகின்றது. படிமுறை அமைப்பில் இந்நீர்வீழ்ச்சியில் நீர்த்தாரை ஓடுவதால் தொலைவில் இருந்து பார்க்கும்போது இது மிகவும் அழகிய தோற்றத்தில் தென்படுகின்றது. எனினும், இது மிக மிக அபாயகரமான நீர்வீழ்ச்சியாகும். ஏனெனில், இதன் நீர் சேமிக்கப்பட்டு வழிந்தோடும் பகுதி 19m வரை ஆழமுடையதுடன், இதில் நீர்ச்சுழிகளும் அதிகம் காணப்படுகின்றன.

ம.ஹரிகர பிரகாஸ்,
பொகவான
கில்லார்னி த.வித்.,
பொகவந்தலாவ.




# ஆசான்கள்





உலகிற்கு ஒளி வீசி
அறிவென்னும் அலை பரப்பும்
ஆழ்கடலே ஆசான்கள்!

எமக்காய் ஒளிரும் அவர்கள்
மெழுகாய் உருகும்
பெருந்தகையோர்!

அறிவென்னும் பால் கடைந்து
அமுதாக எமக்கு ஊட்டுவர்
ஆய கலைகளையும்
எமக்களிப்பர்!

இளமையிற்
கல்வியை
சிலையில் எழுத்தாய்
செதுக்கும் சிற்பிகள்

எத்தனை துயரங்கள்
தமக்கிருந்தும்
தன் கடமைதனை
செய்திடுவர்
எமது அன்புமிகு
ஆசான்கள்!

அகீலா அன்வர்,
வெல்பொதுவெவ பொரலுவெவ, குருணாகலை.

# முட்டாள் ஓநாய்




செம்படவன் ஒருவன் நிறைய மீன்களைப் பிடித்து தனது கூடையில் போட்டுக் கொண்டு பாதை வழியே சென்றுகொண்டிருந்தான். அப்போது சிறிது தூரத்தில் ஒரு கொக்கு, அந்த மீன்களைக் கவர்வதற்காக அந்தவழியில் இறந்து கிடப்பதைப்போல் பாசாங்கு செய்தது. அதைப் பார்த்துவிட்டுச் சிறிது தூரம் நடந்து வந்ததும் மறுபடியும் செம்படவன் கொக்கு ஒன்று இறந்து கிடப்பதைப் பார்த்தான். ஒரே கொக்குதான் பல இடங்களில் செத்துக்கிடப்பதைப்போல் பாசாங்கு செய்தது. கடைசியாக செம்படவன் செத்துக் கிடந்த அந்த கொக்கை தன் கூடையில் போட்டுக் கொண்டான். அப்போது இறந்து கிடப்பதைப் போன்று பாசாங்கு செய்த அந்த கொக்கு, அக்கூடையில் இருந்த மீன்களைக் கௌவிக் கொண்டு அங்கிருந்து தப்பியது. நிறைய மீன்களுடன் கொக்கு வருவதைப் பார்த்த ஓநாய், ''எவ்வாறு இவ்வளவு மீன்களை பிடித்தாய்?'' என்று கேட்டது. தான் செய்தவற்றை ஓநாயிடம் விபரித்தது கொக்கு.

அடுத்தநாள் ஓநாயும் கொக்கைப் போன்று செம்படவன் வரும் வழியில் இறந்து கிடப்பதைப் போல் நடித்தது. அதைக்கண்ட செம்படவனுக்கு முதல்நாள் கொக்கு தன்னை ஏமாற்றி மீனை எடுத்துச் சென்றமை நினைவிற்கு வந்தது. கோபமுற்ற செம்படவன் பெரிய தடியினால் ஓநாயை நையப் புடைத்தான். ஓநாய் தப்பினேன் பிழைத்தேன் என்று அங்கிருந்து ஓட்டம் எடுத்தது.

சே.டினோஜா,
ஊற்றுப்புலம்,
கிளி/கோணாவில் ம.வித்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.105



**மேலிருந்து கீழ்**

01. பார்வைப் புலன் அற்றவன்.
02. அடிக்கடி நிறத்தை மாற்றும் பிராணி.
03. நட்சத்திரம். (தலைகீழ்)
04. தென் மாகாணத்திற்குரிய ஒரு மாநகரம்.
06. கோல். (தலைகீழ்)
07. வயது.
09. விளக்கில் நெருப்புப் பற்ற வைக்கும் பகுதி.

**இடமிருந்து வலம்**


01. பெற்றோர், பிள்ளைகளை உள்ளடக்கிய சமூக அமைப்பு.
03. தோற்றம். (மாறியுள்ளது)
05. இரட்டை. (மாறியுள்ளது)
07. பிராமணன். (மாறியுள்ளது)
08. தேதி.
10. ஈரலிப்பு.
11. எதிரி.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.104 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ந | கை | ச் | 2 சு | வை | ■ |
| ரை | 3 கூ | ■ | 4 ம | டு | ■ |
| ■ | ■ | 5 க | ங் | 6 கு | ல் |
| ம் | ப | ப் | 7 க | ■ | டி |
| ண | ■ | 8 ப | லி | ■ | ட் |
| 9 ம | ட | ல் | ■ | னி | 10 தொ |

## 2

A படத்தை நன்கு அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக






Sponsored by

NATARAJ®

Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03


## 3


உருக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இணைக்க



| | |
|---|---|
| 4 | ○ |
| 5 | □ |
| 7 | △ |
| 2 | ▭ |
| 4 | ♡ |
| 3 | ☆ |

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 42 விடைகள்

போட்டி: 01



போட்டி: 03







'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 08.10.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 44
விஜய் த.பெ.எண் 2037, கொழும்பு

**பரிசுப் பொதி**

1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 42 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
ப.பிரித்திகா, கோப்பாய்.

**2ஆம் பரிசு**
அ.அபித்தா, பூண்டுலோயா.

**3ஆம் பரிசு**
முஆத் முஸம்மில், பம்மன்ன.

**பாராட்டுப் பெறுவோர்:**

- கே.தர்ஷா, புஸ்ஸல்லாவ.
- அத்லி அஹமட், கிண்ணியா-02.
- சே.டினோஜா, கிளிநொச்சி.
- என்.மாதவன், இறத்தோட்டை.
- எம். முஹம்மட், வெல்லம்பிட்டி.
- எம்.சகீர், கல்பிட்டி.
- பா.கவிதா, கல்முனை.
- எஃப்.நுஸ்ரத், பேருவளை.
- வி.சரண்யா, மடுல்சீமை.
- எஸ்.நிலூபா, கல்ஹின்ன.

## 1

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| tea | p | r | a | e | t | e |
| pony | o | o | q | h | e | e |
| duck | n | b | q | k | p | k |
| snake | y | o | q | c | a | a |
| grape | v | t | t | u | r | n |
| robot | k | t | q | d | g | s |

அருகிலுள்ள சொற்களை எழுத்துக் கூட்டத்திற்குள் கண்டுபிடித்து, நிறந்திட்டுக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன அழுத்தத்தால் ஏற்படும் நோய் எதிர்ப்பு சக்தி

அதிகளவான மன அழுத்தம் உடலில் நோய்கள் பலவற்றை ஏற்படுத்தும் அதேவேளை, சிறிய அளவிலான மன அழுத்தமானது நோய் எதிர்ப்பு





சக்தியை அதிகரிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இத்தகைய சிறிய மன அழுத்தங்கள் உடலில் ஏற்படும் நோய்கள் சிலவற்றை தடுப்பதாகவும் கூறப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள், பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் நபர்களுக்கு மத்தியில் ஏற்படும் சிறிய அளவான மன அழுத்த நிலையானது, குருதி நாளங்கள், திசுக்கள் மற்றும் சருமங்களில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.

இந்த நோய் எதிர்ப்பு சக்தி செல்கள் உடலில் ஆரோக்கியமான ஹோர்மோன்கள் சுரப்பில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. மூளையின் செல்கள்கூட இந்த ஹோர்மோன்கள் மூலம் புத்துணர்ச்சி பெறுவதாகவும் கூறப்படுகின்றது. இத்தகைய விபரங்கள் பத்தாண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்மூலம் தெரிய வந்துள்ளன. இது தொடர்பான மேலதிக ஆய்வுகள் 'ஸ்டோன்போர்ட்' பல்கலைக்கழக நோய் எதிர்ப்பு மற்றும் மனோதத்துவ நடத்தையியல் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



நாவலப்பிட்டி கொலப்பத்தனையைச் சேர்ந்த ராஜேந்திரன்-சுந்தரி தம்பதியரின் செல்வப் புதல்வன் பால்ராஜி, தனது முதலாவது பிறந்தநாளை 21.09.2014 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: கயல்விழி)*

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு







மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் சாரதா பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜி மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் உரையாற்றுவதையும், இப்போட்டியில் வினோத உடை நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் சிலரையும் படங்களில் காணலாம். (தகவல்: ஆர்.கிருஷ்ணபிள்ளை, ஆரையம்பதி)

## கைவண்ணங்கள்



எச்.சப்னா,
இக்கிரிகொள்ளாவ மு.ம.வித்.,
அநுராதபுரம்.



ஆர்.நவனீதன்,
டவுன்சைட் தோட்டம்,
வெளிமடை.



எஃப்.இம்னா,
அல்-ஹுதா பாலர் பாட.,
றம்புக்கனை.



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



வெலண்டினி மேலினா,
புனித அன்னம்மாள் ம.ம.வித்.,



மொஹமட். ரினாஸ்,
மாறை/ ஸதாத் ம.வித்.,



சி.நிலக்சனா,
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்., யாழ்ப்பாணம்.



என்.ஆயிஷா ஹம்தா,
கே/மா/பதுரியா ம.கல்., மாவனல்லை.



ரெ.ரொம்சன்,
மன்/ஆண்டான்குளம் றோ.க த.பாட., ஆண்டான்குளம்.



வி.றதுஷ்ஷினா,
ஸ்ரீ சண்முகா இந்து மத்.கல்.,
திருகோணமலை.



எ.யேசிகன்,
சென். ஜோசப் கல்., மஸ்கெலியா.



எல்.மிதுர்ஷிகா,
கார்மேல் பற்றிமா தே.பாட.,
கல்முனை.



ச.விதுர்ஷன்,
இ/எம்பி பரியோவான் கல்.,
இறக்குவானை.

## புலமைப்பரிசில் விடைகள்

(செப்டெம்பர் 24 ஆம் திகதி பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்)

### சுற்றாடல்

**01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 05. | 1 | 09. | 3 | 13. | 1 |
| 02. | 2 | 06. | 1 | 10. | 3 | 14. | 1 |
| 03. | 4 | 07. | 2 | 11. | 1 | 15. | 1 |
| 04. | 4 | 08. | 1 | 12. | 2 | 16. | 3 |

**02)** 1. அரிவாள் 2. சீமெந்துக்கரண்டி 3. சுத்தியல் 4. சங்கு

**03)** 1. X 2. ✓ 3. X 4. ✓ 5. ✓ 6. ✓ 7. X

**04)** 1. C 2. A 3. B 4. D 5. F 6. E

**05)**
1. மா, பலா, வாழை, பப்பாசி
2. முள்முருங்கை/வேம்பு
3. வேப்பம்பூ/ வில்வம்பூ/ பொன்னாவரைப்பூ
4. காகம், சேவல்
5. அட்டை, தேனீ, வண்ணத்துப்பூச்சி, குருவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறு மழை உருவாகின்றது?

ஒரு மேகத்திற்குள் சுழல்காற்றுகள், நீர்த் துளிகளை சுற்றச் செய்கின்றன. அந்த நீர்த் துளிகள் ஒன்றுடன் ஒன்று மோதும்போது, அவை ஒன்றாகச் சேர்ந்து கனமானவையாக மாறி பூமியில் விழ ஆரம்பிக்கின்றன. அவை விழும்போது, இடையில் மேலும் அதிகமான ஈரப்பதத்தை உள்ளீர்த்துக்கொண்டு மேலும் பெரிய நீர்த் துளிகளாக உருவெடுக்கின்றன. சிறிய நீர்த்துளிகள் ஏறக்குறைய வட்டமாக உருண்டை வடிவத்தில் காணப்படுகின்றன. பெரிய நீர்த் துளிகளின் கீழ்ப்பகுதி தட்டையாக காணப்படுகின்றன. இந்த நீர்த் துளிகளே மழையாக சொட்டுச் சொட்டாக கீழ் விழ ஆரம்பித்து 'சோ' வென பெய்கின்றது.

# ஓவியம் வரைவோம்

## குதிரை ஒன்று வரையலாம்



# வெந்நீர் நீரூற்றுகள்



ஆவி பறக்கும் வெப்ப நீர் ஊற்றுக்கள் பெரும்பாலும் தாதுக்கள் அல்லது பாசியால் மெலிதான சிவப்பு, மஞ்சள், பச்சை அல்லது நீல வண்ணத்தில் காணப்படுகின்றன. இவை வெந்நீர் வைக்கும் கருவி (ஹீட்டர்) போன்றே செயற்படுகின்றன. குளிர்ச்சியான மழைநீர், பாறைகள் வழியாக துளித்துளியாக விழுந்து அவை எரிமலைக் குழம்பால் உஷ்ணப்படுத்தப்படுகின்றன. இத்தகைய, சூடான நீர் தாதுக்களையும், ஏனைய சேர்மானங்களையும் தன்னுள் உள்வாங்கியபடி தரையின் கீழ்மட்டத்திலிருந்து பூமியின் கீறல் அல்லது வெடிப்பு ஏற்பட்ட பகுதியிலிருந்து சூடான குமிழிகளாய் மெது மெதுவாய் வெளிவந்து ஊற்றாக உருமாறுகின்றன. நீர் உள்வாங்கிய தாதுக்களும், பிற சேர்மானங்களும் நீரின் மேலேயே படிந்து ஊற்றின் விளிம்பாய் அமைந்துவிடுகின்றன. இந்த புவிசார் வெப்ப ஊற்றுகள் வெப்ப நிலையில் மாறுபட்டாலும், பெரும்பாலான வெப்ப நீரூற்றுகள் ஒரு முட்டையை வேக வைக்கக்கூடிய அளவுக்கு வெப்பத்தைக் கொண்டிருக்கின்றன.






லூகி கல்வானி

அலெஸ்ஸெண்ட்ரோ வோல்ட்டா

# உலகின் முதலாவது மின்கலம் தவளையிலிருந்தே தோன்றியது!



மிகவும் சிறிய தூண்டுதல்தான் பல பெரிய கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கின்றது. 1800 களில் இத்தாலியின் இயற்பியலாளர் அலெஸ்ஸெண்ட்ரோ வோல்ட்டா முதலாவது மின்கலத்தைக் (Battery) கண்டுபிடித்தார். அந்த முதலாவது மின்கலம் நிறுத்திவைக்கப்பட்டுள்ள குழாய்த் துண்டு போன்று காட்சியளித்தது. சம அளவில் இருக்கும் வட்ட வடிவ தாமிரம் (Copper) மற்றும் துத்தநாக (Zinc) தகடுகள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டு இவற்றின் இடையே உப்புநீரால் தோய்க்கப்பட்ட காகிதங்கள் வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு உலோகத் தகடும் கனதியான உலோகக் கம்பியால் இணைக்கப்பட்டிருந்தது.



இவரது இந்த மின்கல கண்டுபிடிப்பிற்கு மிகவும் தூண்டுதலாக இருந்தது சுவாரஸ்யமான ஒரு நிகழ்வாகும். லூகி கல்வானியின் (Luigi Galvani) ஆய்வுகூடத்தில், தாமிர கம்பியில் தொங்கவிடப்பட்டிருந்த ஓர் இறந்த தவளையின் காலின் அருகே கொண்டு செல்லப்பட்ட மெல்லிய இரும்புத் தகடு அதன் காலில் எவ்வாறு அசைவை ஏற்படுத்தியது? என்ற சிந்தனையே வோல்ட்டா மின்கலம் கண்டுபிடிப்பதற்கு தொடர் தூண்டுதலாக இருந்துள்ளது. இதேபோன்று வோல்டா ஏற்படுத்திய முதல் மின் தூண்டல் பிற்காலத்தில் அதாவது 1821 இல் மைக்கேல் ஃபரடேவிற்கு மின்மோட்டரை கண்டுபிடிக்க உதவியாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஜய் சாரணர் உலகம்

## நீரில் மூழ்குபவரை மீட்கும் சாரணர்

ஆற்றில், குளத்தில் அல்லது கடலில் குளிக்கும்போது, யாராவது நீரில் மூழ்குகின்றனர் என வைத்துக்கொள்ளுங்கள். சாரணர்கள் என்ற வகையில்



நீங்கள் என்ன செய்வீர்கள்? நீரில் மூழ்குகின்றவரை உயிர் மீட்பதற்கான முயற்சியில் நிச்சயமாக நீங்கள் ஈடுபட வேண்டும்.

### காப்பாற்ற முன்வாருங்கள்

'உயிர் காப்பு' பணிக்காக சாரணர்களுக்கு 'கெலண்டரி' எனும் விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உலக சாரணர் சங்கத்தினாலேயே இந்த விருது வழங்கப்படுகின்றது. இலங்கையின் சாரணர் சங்க உதவி ஆணையாளர் டேமியன் சில்வா அவர்களுக்கும் இந்த விருது கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இதனைக் கவனத்தில் கொள்ளுங்கள்

முதலில் உங்களால் நன்றாக நீந்த முடியுமா?



முடியாதா? என்பதற்கான உறுதியான பதில் இருந்தால் மாத்திரமே நீரில் இறங்குவதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கலாம். உங்களுக்கு நீந்தத் தெரியாது என்றாலும் கூட, கரையில் இருந்துகொண்டே உங்களால் முடிந்தவரையில் நீரில் மூழ்குபவரை மீட்பதற்கு முயற்சிக்க முடியும். அதற்கமைய, நீண்ட தடியொன்றை எடுத்து மூழ்குபவரை நோக்கி நீட்டி அதன் மறுமுனையை பற்றிக் கொள்ளச் செய்யவேண்டும்.


அப்படியும் இல்லாவிட்டால் மிதக்கக்கூடிய பொருளொன்றை கயிற்றில் கட்டிவிட்டு அதனை மூழ்குகின்றவரை நோக்கி வீசி எறியவேண்டும். இவ்வாறு வீசி எறியும்போது அப்பொருள் மூழ்குகின்றவரின் தலையில் பட்டுவிடாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

### மூழ்குகின்றவர் தளர்வுற்றிருப்பின்

தசைப்பிரள்வு, சுயநினைவு ஓரளவு குறைந்துகொண்டிருத்தல் போன்ற காரணிகளுடன் மூழ்குபவரின் உடலானது தளர்வுற்றுக் காணப்பட்டால், அத்தகையவருக்கு கயிற்றினைப் பற்றிக் கொண்டு கரையை நோக்கி வருவது சிரமமான காரியமாகும். எனவே, இப்படியான சந்தர்ப்பத்தில் உயிர்மீட்பாளர்களின் உதவியை நாடியே ஆகவேண்டும். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் நீரில் மூழ்கிக்கொண்டிருப்பவரை படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்.

### செயற்கைப் பாலமாதல்

உயிர்மீட்பாளர் நீரில் பாய்ந்து மிதந்தவாறு குறித்த கயிற்றின்



முனையைப் பற்றிக் கொண்டு அதனை நீரில் மூழ்குபவரை நோக்கி இழுத்துச் செல்வார். இதன்போது மூழ்குபவர் அந்த கயிற்றைப் பற்றிக்கொண்டதும் மீட்பு வீரர் அந்த கயிற்றின் துணையுடன் மூழ்குபவரையும் இழுத்துக்கொண்டு கரையை நோக்கி நீந்தி வருவார்.

கரையில் இருக்கும் ஏனையவர்களும் கயிற்றினை கரையைநோக்கி இழுப்பதன்மூலம் மூழ்குபவரையும், மீட்பு வீரரையும் கரையை நோக்கி விரைவாக இழுத்தெடுக்க முடியும்.


### சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர்கள் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| ஃபிஜி | 7,284 | 1971 | 1914 |

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)


## மரத்தின் துணையுடன் மேசை அமைப்போம்



நீங்கள் குழுவாக சாரணர் முகாம் ஒன்றை அமைக்கையில், கூடாரத்திற்குப் பின்புறம் மேசை போன்ற கட்டுமானம் ஒன்றை அமைப்பதற்கு அவ்விடத்தில் உள்ள இரண்டு மரங்களைப் பயன்படுத்த முடியும். இரண்டு மரங்களுக்கிடையே குறுக்காக தடிகளைச் செலுத்தி அவற்றை இறுக்கமாகக் கட்டிவிட்டு அவற்றின் மேல்புறம் பலகைகளையோ அல்லது சிறு குச்சித் தடிகளையோ அடுக்கி அதனை ஒரு மேசையாகப் பயன்படுத்த முடியும்.

## முடிச்சுக்கள் சில...

சாரணர்கள் முகாம் அமைக்கையில் முக்கிய சில முடிச்சுக்களை தெரிந்திருப்பது நல்லது. அவ்வகையான சில முடிச்சுக்களே இங்கு தரப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியா




கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள கொரியா நாட்டை 'ஹெங்குக்' என்றும் அழைப்பர். அந்நாடு வடக்கு மற்றும் தெற்கு என பிளவுபட ஆரம்பித்தது 5, 6, 7 ஆம் நூற்றாண்டுகளில் ஆகும். அக்காலத்தில் 'சிலா' என அழைக்கப்பட்ட அந்நாடு பின்னர் 'கொகுரியேவோ' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. அதன் மூலமாகவே கொரியா எனும் பெயர் உருவானது. அரச வம்சங்கள் பல உருவாகியபின் 1871 இல் கொரியா உருவானது. 1910 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்த ஜப்பானிய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து 1945 இல் நாட்டை இரண்டாகப் பிரித்து வட கொரியாவை ஐக்கிய சோவியத் சமவுடமை குடியரசிற்கும் தென் கொரியாவை ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஆட்சி நடாத்த பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கையில் ஈடுபட்டது. 1950 முதல் 1953 வரை நீடித்த வடக்கு-தெற்கு கொரியா நாடுகளுக்கிடையே மூன்று 'கொரிய யுத்தத்தைத் தொடர்ந்து யுத்த நிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ளது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்









# உமிழ்நீர் சுரப்பதன் அவசியம்



எமக்குப் பிடித்த உணவை நினைத்தாலோ அல்லது பார்த்துவிட்டாலோ அல்லது உணவின் மணத்தை உணர்ந்தாலோ, எமது வாயில் உள்ள உமிழ்நீர் சுரப்பிகள் தானாகவே உமிழ்நீரை சுரக்க ஆரம்பித்துவிடும். உமிழ்நீரானது, உணவை ஈரப் படுத்தி எளிதாக உட்கொள்ளவும் உணவு சமிபாடடையச் செய்யவும் உதவுவதோடு, நாவசைத்துப் பேசவும் உதவுகின்றது. உமிழ்நீரானது, எச்சில், வாயூறுநீர், வாய்நீர் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

உமிழ்நீரில் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்ட பதார்த்தங்களும் சமிபாட்டிற்கு உதவக்கூடிய

### வாயில் உள்ள பிரதான உமிழ்நீர் சுரப்பிகள்




நொதியங்களும் அதிகம் அடங்கியுள்ளன. நாம் சாப்பிடும் உணவு மிகச் சிறிய துகள்களாக ஆவதற்கு இந்த உமிழ்நீர் நொதியங்கள் பெரிதும் உதவுகின்றன. மனிதன் ஒருவனின் வாயில் ஒரு நாளைக்கு 1-2 லீற்றர் அளவு உமிழ்நீர் சுரக்கின்றது. மனிதனின் வாயில் உள்ள மூன்று பெரிய உமிழ்நீர்ச் சுரப்பிகளும் நாக்கு, கன்னம்,உதடு, மேலண்ணம் போன்ற பகுதிகளில் உள்ள சிறு சிறு சுரப்பிகளும் உமிழ்நீரை சுரக்கச் செய்கின்றன.

உமிழ்நீரானது, உணவுத் துகள்களைக் கரைப்பதால், உணவின் சுவை உணரப்படுகின்றது. பற்களின் நலம் கெடாமலும், உணவுத் துகள்கள் வாயினுள் இருந்து நீக்கப்படவும் உமிழ்நீர் உதவுகின்றது. உமிழ்நீரில் அடங்கியுள்ள புரதங்களால் நோய்க் கிருமிகளை அழிக்க முடியும். பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்றுநோய்களில் இருந்து மனிதர்களைக் காப்பதற்கு உமிழ்நீரில் உள்ள புரதங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக ஆய்வுகள்மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

## மனிதனுக்கு நன்கு அறிமுகமான பறவையினம்:

# சிட்டுக்குருவி



முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் ஒரு பறவையினமே இந்த 'சிட்டுக்குருவி ஆகும். 'பசரீன்' குடும்பத்தைச் சேர்ந்த இது; வீட்டுக்குருவி, அடைக்கலக்குருவி, ஊர்க்குருவி போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. காகத்திற்கு அடுத்ததாக மனிதனுக்கு நன்கு அறிமுகமான பறவையினம் சிட்டுக்குருவியாகும்.




### உடலமைப்பு

கூரான சிறிய அலகு மற்றும் சிறிய கால்களைக் கொண்ட சிட்டுக்குருவி, உருவத்தில் சிறியதாகவும் இளம் சாம்பல் கலந்த பழுப்பு மற்றும் மங்கலான வெள்ளை நிறங்களில் காணப்படும். இது 8 முதல் 24 செ.மீற்றர் நீளம் கொண்டது. 27 முதல் 39 கிராம் வரையிலான எடையைக் கொண்டிருக்கும். சிட்டுக்குருவியின் ஆண் பறவைக்கும் பெண் பறவைக்கும் இடையில் உடலமைப்பில் சிற்சில வேறுபாடுகள் காணப்படும்.

### வசிப்பிடமும் வாழ்க்கை முறையும்

ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சிட்டுக்குருவி இனங்கள் வசிக்கின்றன. சிட்டுக்குருவியின் ஆயுட்காலம் சுமார் 13 ஆண்டுகளாகும். மனிதர்கள் வாழும் பகுதிகளில் இவை வசித்தாலும், மனிதர்களோடு பழகுவதில்லை. சிட்டுக்குருவிகள் மரத்திலும் வீடுகளின் மறைவான இடங்களிலும் வைக்கோல் போன்ற மெல்லிய பொருட்களைக் கொண்டு கூடு கட்டி வசிக்கும் இயல்புடையவை.

சிலவகை சிட்டுக்குருவிகள் புழு, பூச்சிகளை உணவாகக் கொள்வதோடு, மேலும் சிலவகை சிட்டுக்குருவிகள் பூக்களின் மொட்டுகளையும் உணவாகக்கொள்ளும். எவ்வாறாயினும், பொதுவாக சிட்டுக் குருவிகள் அனைத்தும் உண்ணிகளாகவே கருதப் படுகின்றன. பெண் சிட்டுக் குருவியொன்று இனப்பெருக்க காலத்தில் மூன்று முதல் ஐந்து முட்டைகள் வரை இடும். அவற்றின் முட்டைகள் பச்சை கலந்த வெள்ளை நிறத்தில் காணப்படும். குஞ்சுகள் பறக்கத்தொடங்கும் வரை, அவை தமது தாய், தந்தையின் பராமரிப்பில் கூட்டிலேயே வளர்கின்றன.

### அருகிவரும் சிட்டுக்குருவிகள்

சுற்றுச்சூழல் சீர்கேடுகளால் பாதிக்கப்படும் உயிரினங்களின் பட்டியலில் சிட்டுக்குருவிகளும் இடம்பிடித்துள்ளன. உலக வெப்பமயமாதல், காடழிப்பு, நகரமயமாதல் என பல்வேறு சீர்கேடுகள் காரணமாக, நகரப்பகுதிகளில் இவை அருகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கையடக்கத் தொலைபேசிக் கோபுரங்களில் இருந்து வெளியாகும் மின்காந்த அலைகளின் தாக்கம் இந்தக் குருவியினத்தின் இனப்பெருக்கத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 01, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org